بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ    نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 10

இதழ் 49

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஜமாதிஸ் ஸானீ 12
ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - 04 ஃபத்ஹ் ★ 04 டிசம்பர் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ص

அல்லாஹ்விடமிருந்து (உமக்கு வழங்கப் பெற்று)ள்ள மகத்தான அருளின் காரணமாகவே, நீர் அவர்களுக்கு மென்மை வாய்ந்தவராகத் திகழ்கின்றீர். நீர் தீய ஒழுக்கமும், கடின உள்ளமும் உடையவராக இருந்திருப்பின் அவர்கள் உம் சூழலில் இருந்து சிதறிச் சென்றிருப்பர்.
(ஆலி இம்ரான்:160)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## மற்றவர்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு மென்மையுடன் உரையாடுங்கள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

தீமையை விட்டு விலகுவதற்கான ஒழுக்கங்களில் நான்காவது நற்குணம் என்பது மென்மை மற்றும் கனிவாக பேசுதல் ஆகும். மேலும் இது முகமலர்ச்சி என்ற இயல்பான நிலையிலிருந்து தோன்றும் பண்பாகும். குழந்தை பேசுவதற்கு தகுதி பெற்றுவிடாத வரை மென்மை மற்றும் கனிவாக பேசுதலுக்கு பகரமாக முகமலர்ச்சியை அது வெளிப்படுத்துகின்றது. முகமலர்ச்சி என்ற வேரிலிருந்துதான் மென்மை என்ற கிளை தோன்றுகின்றது என்பதற்கு இதுவே சான்றாகும். முகமலர்ச்சி ஓர் ஆற்றல் ஆகும். அந்த ஆற்றலை உரிய தருணத்தில் வெளிப்படுத்துவதால் தோன்றும் நற்குணம் மென்மையாகும்.

இதில் வல்ல இறைவனின் போதனை இதுவாகும். அதாவது, எந்த கூற்றுகள் உண்மையாகவே நன்மையானவையாக இருக்குமோ அந்த கூற்றுகளையே மக்களிடம் பேச வேண்டும். ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்தை ஏளனம் செய்ய வேண்டாம்; எவர்கள் எள்ளிநகையாடப்படுகின்றார்களோ அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக் கூடும்; பழிசுமத்தாதீர்கள்; உங்கள் மக்களுக்கு தீய பெயர் சூட்டாதீர்கள்; தப்பெண்ணங்களுக்குரிய பேச்சுகளை பேசாதீர்கள்; (பிறரது) குற்றங்களை துருவித் துருவி ஆராயாதீர்கள்; ஒருவர் மற்றவரை புறம் பேசாதீர்கள். ஒருவரைக் குறித்து உங்களிடம் எந்த சான்றும் இல்லாத நிலையில் அவர் மீது பழியோ, அவதூறோ சுமத்தாதீர்கள்.

நினைவிற் கொள்ளுங்கள்! ஒவ்வொரு உறுப்பும் விசாரிக்கப்படும். காது, கண், உள்ளம் ஒவ்வொரு உறுப்பிடமும் கேள்வி கேட்கப்படும்.

எதிரி கடுமையாக பேசினால் அதற்கு பதிலாக நீங்களும் கடுமையை மேற்கொள்வது எந்த பயனும் அளிக்காது.

(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானீ கஸாயீன், தொகுதி 10, பக்கம் 350)

** * * * * * *

## மென்மையுடனும் அறிவை பயன்படுத்தியவாறும் பேசுங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அந் நஹ்ல் வசனம் 126-ன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹிக்மத் என்பதற்கு மென்மை என்ற பொருளும் உள்ளது. கூறினார்கள்:

மென்மையுடனும், சிந்தித்தும் பேசுங்கள். ஏனெனில், எந்த நபர் அவ்வாறு செய்வதில்லையோ இன்னும் கூறுவதாயின் அவசரத்துடன் கோபப்பட்டு ஆத்திரம் அடைந்து விடுகின்றாரோ அவரால் பிறருக்கு ஒருபோதும் எதனையும் புரிய வைக்க முடியாது.

நுபுவ்வத் என்ற பொருளின் அடிப்படையில் இந்த வசனத்திற்கு இவ்வாறு பொருள்படும். அதாவது, இறை வேதத்தின் உதவியுடன் மக்களை மார்க்கத்தின் பக்கம் அழையுங்கள் என்பதாகும். திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ள சான்றுகளை எடுத்து வையுங்கள்; நீங்கள் சுயமாக அர்த்தமற்ற விஷயங்களை எடுத்துரைக்காதீர்கள் என்பதாகும். அந்தோ! இந்த வழிமுறையை முஸ்லிம்கள் புரிந்திருந்தால் பின்னர் அவர்கள் யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் வென்றிருப்பார்கள். நமது ஆயுதம் திருக்குர்ஆனே ஆகும். அதனைக் குறித்து இந்த திருக்குர்ஆன் எனும் ஆயுதத்தை ஏந்திக் கொண்டு உலகத்துடன் ஜிஹாது செய்வதற்காக புறப்பட்டு செல்லுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆனால், வேதனை என்னவென்றால், இன்று உலகில் எல்லா விஷயங்களும் முஸ்லிம்களின் கைகளில் இருக்கின்றது; ஆனால், அவர்களின் கைகளில் இல்லாத ஒரு விஷயம் என்னவென்றால், எதனை எடுத்துக் கொண்டு புறப்படுவதற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததோ (திருக்குர்ஆன் எனும்) அந்த வாள் மட்டுமே அவர்களின் கைகளில் இல்லை.

நீங்கள் எத்தகைய வழிமுறையில் பேச வேண்டுமென்றால், அதனை மற்றவர்களால் புரிந்து கொள்ள முடிய வேண்டும்; மேலும் அதன் மூலம் பிறருடைய தவறான புரிதல் அகன்று விட வேண்டும். அதாவது அறிவீனத்தை அழித்து விடக் கூடிய அந்த பேச்சுகளை பேச வேண்டும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 272)

* * * * * * * *

## நபிமொழி

**அல்லாஹ் மென்மை காட்டக் கூடியவன் ஆவான் மென்மையை விரும்புகின்றான் எந்த விஷயத்தில் மென்மை இருக்குமோ அது அந்த விஷயத்தை அழகாக்கி விடுகின்றது**

عَنْ عَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا اَنَّ النَّبِيَّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : اِنَّ اللّٰهَ رَفِيْقٌ يُحِبُّ الرِّفْقَ وَيُعْطِيْ عَلَى الرِّفْقِ مَا لَا يُعْطِيْ عَلَى الْعُنُفِ وَمَا لَا يُعْطِيْ عَلٰى مَا سِوَاهُ

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் மென்மை காட்டக் கூடியவன் ஆவான். மென்மையை விரும்புகின்றான். நன்மைக்கு எவ்வளவு நற்கூலி வழங்குகின்றானோ அவ்வளவு நற்கூலி கடுமை காட்டுதலுக்கு வழங்குவதில்லை. இன்னும் கூறுவதாயின் (மற்ற) நன்மைக்குக் கூட அவ்வளவு நற்கூலி வழங்குவதில்லை.

عَنْ عَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا زَوْجِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : اِنَّ الرِّفْقَ لَا يَكُوْنُ فِيْ شَيْءٍ اِلَّا زَانَهُ وَلَا يُنْزَعُ مِنْ شَيْءٍ اِلَّا شَانَهُ

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு விஷயத்தில் எவ்வளவு நயமும், மென்மையும் இருக்குமோ அதே அளவு அது அந்த விஷயத்தின் அழகிற்கு காரணியாக ஆகிவிடும். எதிலிருந்து நயமும், மென்மையும் பறிக்கப்பட்டு விடுமோ அது அதே அளவிற்கு மோசமானதாக ஆகிவிடும். அதாவது நளினம் மற்றும் மென்மையிலேயே அழகு உள்ளது. (முஸ்லிம் கிதாபுல் பிர் வஸ்ஸலாத், ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண்: 805-806) * * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை வரலாறு**
**ரப்வா சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்காகவும் பாகிஸ்தான் பங்களாதேஷ் அஹ்மதிகளுக்காகவும் பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட மக்களுக்காகவும் துஆக்கள் செய்வதற்கான வழிகாட்டல்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, 'முஆஸே! உமக்கு நீண்ட ஆயுள் கிடைத்தால் பின்னர், இந்த இடம் தோட்டங்களால் நிரம்பி வழிந்து விட்டதைக் காண்பீர்' என்று கூறினார்கள்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலம், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் இந்த இடத்தைக் காண்பார்கள் என்றும், அந்தப் பள்ளத்தாக்கு மரங்கள் மற்றும் தோட்டங்களின் தொகுப்பாக மாறும் என்றும் அறிந்திருப்பார்கள் என்று இதிலிருந்து தெரிய வருகிறது

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிகழ்த்திய அற்புதத்தின் அருள் காரணமாகவே இன்று தபூக்கில் இந்த அளவுக்குத் தண்ணீர் உள்ளது. மதீனா மற்றும் கைபரைத் தவிர வேறு எங்கும் இவ்வளவு தண்ணீரை நாங்கள் பார்க்கவில்லை. உண்மையில், தபூக்கின் தண்ணீர் அந்த இரண்டு இடங்களை விடவும் அதிகமாக உள்ளது. இந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி இப்போது தபூக்கில் எல்லா இடங்களிலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப தபூக் பகுதி தோட்டங்களால் நிரம்பி வழிகிறது. மேலும், நாளுக்கு நாள் அது தோட்டங்களால் நிரம்பிக் கொண்டே செல்கிறது

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 அக்டோபர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **31ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றைய நாட்களில் தபூக் போர் பற்றிய குறிப்பு நடைபெற்று வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் போருக்காகப் புறப்பட்டது குறித்து வரலாறு மேற்கொண்டு நமக்குக் கூறுவதென்னவென்றால், தபூக்கை நோக்கி இஸ்லாமியப் படை புறப்பட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதன்முத◌ல் ஸு கஷப் என்ற இடத்தில் முகாமிட்டார்கள்.

ஸு கஷப் என்பது மதீனாவிலிருந்து ஓர் இரவு பயண தூரத்தில், சிரியா செல்லும் வழியில் அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அங்கு அதிக எண்ணிக்கையில் நீரூற்றுகள் உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளைச் சேர்த்துத் தொழ ஆரம்பித்தார்கள். இந்தப் பயணத்தின்போது, லுஹர், அஸர் மற்றும் மஃரிப், இஷா தொழுகைகளைத் நிரந்தரமாகவே சேர்த்துத் தொழுது கொண்டிருந்தார்கள்.

(கிதாபுல் மகாஸீ லில் வாக்தீ, தொகுதி 2, பக்கம் 386,பாடம்= தபூக் போர்,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2004-ம் ஆண்டு பதிப்பு)

பயணத்தின் போது அன்னார் எங்கெல்லாம் முகாமிட்டார்களோ அதைப் பற்றிய முழுமையான விவரங்கள் கிடைக்கவில்லை; சில இடங்களின் பெயர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. வாய்ப்பு கிடைத்தால் இன்ஷா அல்லாஹ் அவை பின்னர் கூறப்படும்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தபூக் போரில் இருந்தபோது, அன்னார் (ஸல்) பயணத்தைத் தொடங்குவதற்கு முன் சூரியன் சாய்ந்துவிட்டது. அன்னார் (ஸல்) லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளைச் சேர்த்து தொழுதார்கள். சூரியன் சாய்வதற்கு முன் அன்னார் (ஸல்) புறப்பட்டிருந்தால், லுஹரைத் தாமதப்படுத்துவார்கள்; எதுவரை என்றால் அஸர் நேரத்தின்போது கீழே இறங்கிவிடுவார்கள். மஃக்ரிபிலும் அவ்வாறே செய்வார்கள். அன்னார் (ஸல்) புறப்படுவதற்கு முன் சூரியன் மறைந்துவிட்டால், மஃக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைச் சேர்த்துத் தொழுவார்கள். சூரியன் மறைவதற்கு முன் புறப்பட்டால் மஃக்ரிபை தாமதப்படுத்துவார்கள். எதுவரை என்றால் இஷாவிற்காக இறங்கி விடுவார்கள்;பின்னர் இரண்டையும் சேர்த்துத் தொழுவார்கள்.

(ஸுனன் தாவூத், கிதாபுஸ் ஸலாதுஸ் ஸஃபர், ஹதீஸ் எண்: 1208, 1210)

இந்த பயணத்தில் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு இமாமத் செய்யும் நற்பேறு கிடைத்தது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. அதன் நிகழ்வு என்னவென்றால், ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் தபூக் போரில் கலந்துகொண்டார்கள். ஃபஜ்ர் தொழுகைக்கு முன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கழிவறைக்குச் சென்றார்கள். நான் தண்ணீர் பையை எடுத்துக்கொண்டேன். அதாவது தண்ணீர் சுமந்துகொண்டு அன்னாருடன் சென்றேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் திரும்பி வந்தபோது, நான் சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்தேன். நான் தண்ணீர் பையிலிருந்து அன்னாரின் கைகளில் தண்ணீர் ஊற்ற ஆரம்பித்தேன். அன்னார் (ஸல்) தம் இரு கைகளையும் மூன்று முறை கழுவினார்கள்.

இங்கு உளூ செய்யும் முறை விவரிக்கப்படுகிறது. அதாவது பயணத்தில் எவ்வாறு உளூ செய்தார்கள் என்று.

பிறகு அன்னார் (ஸல்) தம் அருளுக்குரிய முகத்தை கழுவினார்கள். பிறகு, அன்னார் (ஸல்) தம் இரண்டு கைகளையும் தம் மேலங்கியிலிருந்து வெளியே எடுக்க முயற்சித்தார்கள். ஆனால் மேலங்கியின் கைப்பகுதி இறுக்கமாக இருந்தன. எனவே, தம் கைகளை மேலங்கியின் கீழ்ப் பகுதி வழியாக வெளியே எடுத்து முழங்கைகள் வரை கழுவினார்கள். பிறகு, தம் காலுறைகள் மீது மஸஹ் செய்தார்கள். அதாவது, அன்னார் (ஸல்) அப்போது சாக்ஸ் (காலுறை) அணிந்திருந்தார்கள். எனவே காலுறைகள் மீது மஸஹ் செய்து அவற்றைத் தூய்மைப்படுத்தினார்கள். பின்னர் நடக்க ஆரம்பித்தார்கள்.

முகீரா கூறுகிறார்கள்: நானும் அன்னாருடன் சென்றேன். நாங்கள் மக்களை அடைந்தபோது, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களை மக்கள் இமாமாக ஆக்கி அவருக்குப் பின்னால்

தொழுதுகொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஒரு ரக்அத் கிடைத்தது. அதாவது, மக்கள் ஏற்கனவே ஒரு ரக்அத்தைத் தொழுதுவிட்டனர். அன்னார் (ஸல்) மக்களுடன் இரண்டாவது ரக்அத்தைத் தொழுதார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஸலாம் கொடுத்தபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் தொழுகையை முழுமையாக்க எழுந்து நின்றார்கள். இது முஸ்லிம்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தியது; அவர்கள் அதிகளவில் தஸ்பீஹ் சொல்ல ஆரம்பித்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தொழுகையை முடித்த பிறகு மக்களின் பக்கம் திரும்பி, 'நீங்கள் செய்தது சரியே என்றார்கள். அல்லது நீங்கள் நல்லது செய்தீர்கள்' என்று கூறினார்கள். தொழுகையை அதன் நேரத்தில் நிறைவேற்றியதற்காக அவர்களைப் பாராட்டினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் மொழியாக்கம், தொகுதி 2, பக்கம் 184 - 185)

ஸமூத் கூட்டத்தாரின் இடிபாடுகள் வழியாகச் சென்றது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தபூக் போரின்போது ஹிஜ்ர் எனும் இடத்தில் முகாமிட்டபோது, அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் குடிக்கவோ, யாருக்கும் கொடுக்கவோ கூடாது என்று அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள். 'நாங்கள் அதன் தண்ணீரில் மாவு பிசைந்துவிட்டோம் என்றும், எங்கள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுத்துவிட்டோம்' என்றும் நபித்தோழர்கள் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'பிசைந்த மாவைக் கொட்டிவிடுங்கள் என்றும், உங்களிடம் இருக்கும் தண்ணீரையும் ஊற்றிவிடுங்கள்' என்றும் கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணவைத் தூக்கி எறியுமாறு கட்டளையிட்டார்கள் என்று வருகிறது.

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தண்ணீரால் பிசைந்த மாவை தூக்கி எறியுங்கள் என்று கட்டளையிட்டார்கள். அதாவது, அந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட நீரைக் கொண்டு பிசையப்பட்ட மாவை.

(ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் அன்பியா, ஹதீஸ் எண்: 3378)

மற்றோர் அறிவிப்பில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அந்தக் கிணற்றின் தண்ணீரைக் குடிக்கவோ, அதைக் கொண்டு உளூ செய்யவோ வேண்டாம் என்றும், எந்த அளவுக்கென்றால், அந்தத் தண்ணீரில் நீங்கள் பிசைந்த மாவை ஒட்டகங்களுக்குக் கொடுத்துவிடுங்கள்; நீங்கள் அதில் இருந்து எதையும் உண்ண வேண்டாம்' என்றும் கூறினார்கள்.

(தாரீகுத் தபரீ, தொகுதி 2, பக்கம் 183, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012-ம் ஆண்டு பதிப்பு)

மற்றோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஸாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகம் தண்ணீர் குடிக்க வந்த கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டும் என்றும் கூறினார்கள். தடை செய்யப்பட்ட கிணற்றிலிருந்து எடுக்கக்கூடாது; அதற்குப் பதிலாக ஸாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகம் தண்ணீர் குடித்த கிணற்றிலிருந்து எடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

(ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் அன்பியா, ஹதீஸ் எண்: 3379)

புஹாரியின் விளக்கவுரை ஆசிரியரான இப்னு ஹஜர் அஸ்கலானியின் கூற்றுப்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அந்த கிணற்றைப் பற்றி, அதாவது ஹஸ்ரத் ஸாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகத்தின் கிணற்றைப் பற்றி வஹீ மூலம் தெரியவந்தது.

(ஃபத்ஹுல் பாரீ, ஷரஹ் ஸஹீஹ் புஹாரீ, தொகுதி 6, பக்கம் 469, கதீமீ குத்ப் கானா, கராச்சி)

ஓர் அறிவிப்பில் உள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ர் வழியாகச் சென்றபோது, 'அநியாயம் செய்த இந்த மக்களின் குடியிருப்புகளுக்குள் நீங்கள் அழும் நிலையில் தவிர நுழைய வேண்டாம்' என்று கூறினார்கள். பெரும் அச்சத்துடனும், அல்லாஹ்விடம் துஆ செய்தவர்களாக நீங்கள் செல்ல வேண்டும். எந்தக் கூட்டத்தாருக்கு தண்டனை இறங்கியதோ அந்தப் பகுதிகளுக்குள் நீங்கள் செல்கிறீர்கள்; அவர்களுக்கு ஏற்பட்ட துன்பம் உங்களுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் போர்வையால் தம் அருளுக்குரிய முகத்தை மூடிக்கொண்டார்கள். அப்போது அன்னார் (ஸல்) தம் சவாரியின் மீது அமர்ந்திருந்தார்கள்.(ஸஹீஹுல் புஹாரி, ஹதீஸ் எண்: 3380)

மற்றோர் அறிவிப்பில், அன்னார் (ஸல்) தம் தலையை மூடிக்கொண்டு பள்ளத்தாக்கைக் கடக்கும் வரை வேகத்தை கூட்டினார்கள் என்று உள்ளது.(ஸஹீஹுல் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4419)

ஹிஜ்ர் என்பது, மதீனாவிலிருந்து தபூக் செல்லும் வழியில் வரும் ஒரு பகுதி. அங்குதான் ஹஸ்ரத் ஸாலிஹ் (அலை) அவர்களின் ஸமூத் கூட்டத்தினர் வசித்தனர். இந்தப் பகுதிக்கு ஹிஜ்ர் என்று பெயர். தற்போது இது மதாயின் ஸாலிஹ் என்று அழைக்கப்படுகிறது. அல்லாஹ் இந்தக் கூட்டத்தாருக்கு ஏராளமான அருட்கொடைகளை வழங்கியிருந்தான். பசுமையான வயல்கள், பாயும் நீரூற்றுகள், பரந்த விவசாய ஏற்பாடுகள், பேரீச்சம் மற்றும் பிற பழத் தோட்டங்கள் இருந்தன. அம்மக்கள் ஈடு இணையற்ற வலிமையும், திறனும் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் கடின உழைப்பாளிகளாக இருந்தனர். அல்லாஹ் இயற்கையான வளங்கள் மூலமாக அவர்களுக்கு ஏராளமாக அருளியிருந்தான். அவர்களின் திறமை என்னவாக இருந்ததென்றால், அவர்கள் மலைகளைக் குடைந்து வீடுகளை கட்டியிருந்தார்கள். ஹஸ்ரத் ஸாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகம் அவர்களுக்கு ஓர் அடையாளமாக இருந்தது. ஆனால் அவர்கள் அதன் கால் நரம்பை வெட்டிவிட்டார்கள். இதனால் அல்லாஹ் அவர்களுக்கு தண்டனை கொடுத்து அழித்தான்.


திருக்குர்ஆனில் இந்தக் கூட்டத்தாரின் பெயர் அஸ்ஹாபுல் ஹிஜ்ர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், திருக்குர்ஆனில் அல்-ஹிஜ்ர் என்ற பெயரில் ஒரு அத்தியாயமும் உள்ளது.

(தாயிரா மஆருஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்), தொகுதி 9, பக்கம் 490)

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகம் தொலைந்து போன ஒரு சம்பவமும் காணக் கிடைக்கிறது. அதன் விவரம் என்னவென்றால், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் தபூக்கை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, வழியில் அன்னாரின் ஒட்டகம் கஸ்வா தொலைந்துவிட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தோழர்கள் அதைக் கண்டுபிடிக்க புறப்பட்டனர். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கருகில் அப்போது ஹஸ்ரத் உமாரா பின் ஹஸ்ம் (ரலி) அவர்களும் இருந்தார்கள். இவர் பைஅத்தே உக்பாவில் கலந்துகொண்டவரும், பத்ர் போரில் கலந்துகொண்ட நபித்தோழரும் ஆவார்.

ஹஸ்ரத் உமாரா (ரலி) அவர்களின் கூடாரத்தில் ஸைத் பின் ஸல்த் என்பவர் இருந்தார். இவர் பனூ கைனுகா எனும் யூத குலத்தைச் சேர்ந்தவர். யூதராக இருந்து பின்னர் இஸ்லாத்தைத் தழுவியிருந்தார். ஆனால் எப்படிப்பட்ட முஸ்லிமாக இருந்தார் என்றால், இவர் முனாஃபிக் போலத்தான் இருந்தார்; இவரின் ஈமான் உறுதியாக இருக்கவில்லை. இந்தப் பயணத்திலும் அவரது நயவஞ்சகத்தனம் வெளிப்பட்டது.

அந்த சம்பவம் என்னவென்றால்,

ஹஸ்ரத் உமாரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கருகில் இருந்தபோது, ஸைத் கூடாரத்தில் இருந்தவர்களிடம், 'முஹம்மத் (ஸல்) அவர்கள் தாம் ஒரு நபி என்றும், வானத்தின் செய்திகளை உங்களுக்கு அறிவிப்பதாகவும் வாதிக்கவில்லையா? ஆனால், அவரின் ஒட்டகம் எங்கு சென்றது என்று அவருக்கே தெரியவில்லையே என்று கூறினார்.

ஸைத் கூடாரத்தில் இவ்விஷயங்களை பேசிக்கொண்டிருந்த நேரத்தில், ஹஸ்ரத் உமாரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கருகில் இருந்தார்கள். அப்போது அன்னார் (ஸல்) ஹஸ்ரத் உமாரா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: 'ஒருவன் என்னைப் பற்றி கூறும்போது, 'முஹம்மத் (ஸல்), உங்களிடம் தம்மை ஒரு நபி என்று சொல்கிறார்; உங்களுக்கு வானத்தின் செய்திகளை அறிவிப்பதாக நினைக்கிறார்; ஆனால் அவரின் ஒட்டகம் எங்கு சென்றது? என்று அவருக்கே தெரியவில்லை என்று அவன் கூறியுள்ளான்.

அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ் எனக்கு எதைக் கற்றுக்கொடுத்தானோ அதைத் தவிர வேறு எந்த மறைவான அறிவும் எனக்குத் தெரியாது. அல்லாஹ் எனக்கு எதைக் கூறுகிறானோ அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்கிறேன். நிச்சயமாக! அல்லாஹ் ஒட்டகத்தைப் பற்றி எனக்குத் தெரிவித்துவிட்டான். அது இன்னின்ன பள்ளத்தாக்கில் உள்ளது,' என்று கூறி ஒரு பள்ளத்தாக்கை கை காட்டினார்கள்.

அந்த நயவஞ்சகனின் வார்த்தைகளைக் கேட்டு அல்லாஹ் உடனடியாகத் தனது தன்மானத்தைக் காட்டி, அந்த ஒட்டகம் இன்ன இடத்தில் இருப்பதாக அவர்களுக்கு கஷ்ஃப் மூலமாகவோ அல்லது இல்ஹாம் மூலமாகவோ அறிவித்துவிட்டான். ' அதன் கடிவாளம் ஒரு மரத்தில் மாட்டிக்கொண்டுள்ளது. நீங்கள் சென்று அதை என்னிடம் கொண்டு வாருங்கள்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பின்னர் நபித்தோழர்கள் சென்று அதைக் கொண்டு வந்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் உமாரா (ரலி) அவர்கள் தம் கூடாரத்திற்குச் சென்று, 'அல்லாஹ்வின் மீதாணையாக! இன்று ஓர் ஆச்சரியமான விஷயம் நடந்தது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் தமக்கு அறிவித்த ஒரு மனிதனைப் பற்றி எங்களிடம் கூறினார்கள்' என்றார். ஹஸ்ரத் உமாரா (ரலி) அவர்களின் கூடாரத்தில் இருந்த ஒரு மனிதர், 'அல்லாஹ்வின் மீதாணையாக! நீங்கள் இப்போது சொன்ன விஷயத்தைத்தான் ஸைத், நீங்கள் வருவதற்கு முன் சொன்னான்' என்று கூறினார். உடனே ஹஸ்ரத் உமாரா (ரலி) அவர்கள் ஸைத்தின் சட்டைக் காலரைப் பிடித்து தமது தோழர்களிடம், 'அல்லாஹ்வின் அடியார்களே! என் கூடாரத்தில் ஒரு பாம்பு இருந்தது; அதைப் பற்றி அறியாமல் இருந்தேன்' என்று கூறினார்கள். பின்னர் ஸைத்தைக் குறிப்பிட்டு, 'இனிமேல் உனக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை' என்று கூறினார்.

சிலர், ஸைத் பின்னர் மனம் திருந்தினான் என்றும், வேறு சிலர் அவன் அதே தீய நிலையில் இருந்தான்; அதே நிலையிலேயே இறந்தான் என்றும் கருதுகின்றனர்.

ஓர் அறிவிப்பில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறிய இடத்திலிருந்து ஒட்டகத்தைத் தேடிக் கொண்டு வந்த நபித்தோழர், ஹாரிஸ் பின் ஹஸ்மஃ (ரலி) ஆவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அஸது காபா, தொகுதி 1, பக்கம் 603, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2003-ம் ஆண்டு பதிப்பு)

இந்தப் பயணத்தில் பயண உணவு, அதாவது ரேஷன் மற்றும் உணவுப் பொருட்கள் குறைவாக இருந்த ஒரு சம்பவமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் விவரம் என்னவென்றால், ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

தபூக் பயணத்தின்போது மக்கள் கடும் பசியால் வாடினர். மேலும், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்களுக்கு அனுமதி கொடுத்தால் எங்கள் தண்ணீரைச் சுமந்து வரும் ஒட்டகங்களை அறுத்து அவற்றை நாங்கள் உண்போம்; அதன் கொழுப்பையும் பயன்படுத்துவோம்' என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு அன்னார், 'அப்படியே செய்யுங்கள்' என்றார்கள்

பசியால் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.

அறிவிப்பாளர் கூறுகிறார்: அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அதைப் பற்றி தெரிய வந்ததும் அவர்கள் வந்து, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அவ்வாறு செய்தால் சவாரி விலங்குகள் குறைந்துவிடும்; எனவே, மக்களிடம் எஞ்சியிருக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு வரச் சொல்லுங்கள்; பிறகு அவர்களுக்காக அதில் பரக்கத்துக்காக துஆ செய்யுங்கள்; அல்லாஹ் அதில் பரக்கத்தை வைப்பது சாத்தியமே' என்று கோரிக்கை வைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'ஆம்! இது சரியே' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தோல் விரிப்பைக் கொண்டு வரச் செய்து அதை விரித்தார்கள். பிறகு அனைவரின் எஞ்சியிருந்த உணவுப் பொருட்களையும் கொண்டு வரச் செய்தார்கள். சிலர் ஒரு கைப்பிடி சோளத்தையும், சிலர் ஒரு கைப்பிடி பேரீச்சம்பழத்தையும், சிலர் ரொட்டித் துண்டுகளையும் கொண்டு வந்தார்கள். எந்த அளவுக்கென்றால், அந்த உணவு விரிப்பில் சிறிதளவு சேர்ந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதில் பரக்கத்துக்காக துஆ செய்தார்கள், பிறகு, 'உங்கள் பாத்திரங்களில் எடுத்துக்கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். மக்கள் தம் பாத்திரங்களில் எடுத்துக்கொண்டார்கள். எந்த அளவுக்கென்றால், படையில் இருந்த எந்தப் பாத்திரத்தையும் விடாமல் நிரப்பினார்கள். பிறகு அனைவரும் சாப்பிட்டார்கள்; திருப்தி அடைந்தார்கள், இன்னும் சிறிது மீதமும் இருந்தது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்திற்குரியவன் இல்லை என்றும், நான் அல்லாஹ்வின் தூதர் என்றும் நான் சாட்சியம் கூறுகிறேன். எவர் ஒருவர் இந்த இரு சாட்சியங்களிலும் எந்தச் சந்தேகமும் இன்றி அல்லாஹ்வைச் சந்திப்பாரோ அவர் சுவர்க்கத்தை விட்டு தடுக்கப்பட மாட்டார்' என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம், பாடம் கிதாபுல் ஈமான், ஹதீஸ் எண்: 45)

இந்தப் பயணத்தில் நிகழ்ந்த வேறு பல சம்பவங்களைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கின்றன. அதில், இரு நபர்களுக்கு இடையேயான சண்டையைப் பற்றிய குறிப்பும் வருகிறது.

ஹஸ்ரத் யஃலா பின் உமையா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தபூக் போரில் கலந்துகொண்டேன். என்னிடம் ஒரு வேலைக்காரன் இருந்தான்; அவன் ஒரு மனிதனுடன் சண்டையிட்டான். அவர்களில் ஒருவன் மற்றவனின் கையில் கடித்தான். யார் கடிக்கப்பட்டாரோ, அவர் தன் கையை கடித்தவனின் வாயிலிருந்து இழுத்தார். அதனால், கடித்தவனின் முன் பற்களில் ஒன்று கழன்று (விழுந்து)விட்டது.

கடித்தவர் எந்த அளவு இறுக்கமாகப் பிடித்திருந்தார் என்றால், கையை எடுக்க முடியவில்லை. அதனால் கையை இழுத்தபோது, எவர் கடித்துக் கொண்டிருந்தாரோ, எவரது வாயில் கை இருந்ததோ அவரது பல் பிடிங்கிக் கொண்டு வந்து விட்டது.

எவ்வாறிருப்பினும், அந்த இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தனர். பல் உடைந்தவர் இழப்பீடு கோரினார், அதாவது, 'இவன் என் பல்லை உடைத்துவிட்டான்; அதற்கு எனக்கு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும்' என்றார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை நிராகரித்து விட்டார்கள். 'இது தவறு' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அதாவது, இழப்பீடு பெற அவர் தகுதியானவர் அல்ல என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஒட்டகத்தின் வாயில் மெல்லக் கொடுப்பதுபோல் உனது வாயில் நீ மெல்லுவதற்காக அவர் தமது கையை விட்டுவைத்திருப்பாரா? என்றார்கள். கடிக்கப்பட்டவர் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள தன் கையை இழுத்ததால் பல் உடைந்தது; எனவே எந்த இழப்பீடும் கிடையாது என்றார்கள்.

(ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் மகாஸீ, தபூக் போர், ஹதீஸ் எண்: 4417)

எனவே, இழப்பீடு பற்றிய தீர்ப்பும் உண்மை நிலை மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்பவே வழங்கப்படும். உண்மையைப் பார்க்காமல் இழப்பீடு வழங்கப்படாது.

அதேபோல், இந்தப் பயணத்தைப் பற்றி வேறு சில நிகழ்வுகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, ஹஸ்ரத் ஹுமைத் ஸாஇதி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

தபூக் போரின் பயணத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாதிஅல் குரா எனும் இடத்தை அடைந்தபோது, அங்கு பேரீச்சந்தோட்டம் ஒன்று இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம், 'எவ்வளவு பேரீச்சம்பழம் இருக்கும் என்று மதிப்பிடுங்கள்' என்று கூறினார்கள். அனைவரும் மதிப்பிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் பத்து வஸக் அதாவது கிட்டத்தட்ட 1800 கிலோ பேரீச்சம்பழம் அறுவடையாகும் என்று மதிப்பிட்டார்கள். அத்தோட்டத்தில் அதன் உரிமையாளரான ஒரு பெண் நின்றுகொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், 'நீங்கள் இந்தப் பழங்களை அறுவடை செய்யும்போது, எவ்வளவு இருந்தது? என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்' என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: தபூக்கிலிருந்து திரும்பியபோது நாங்கள் அதே தோட்டத்தின் அருகே வந்தபோது அந்தப் பெண்ணிடம் எவ்வளவு பழங்கள் அறுவடையானது என்று கேட்டோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதிப்பிட்ட அதே அளவை, அதாவது பத்து வஸக் என்று அவள் கூறினாள்.

அதே அறிவிப்பாளர் கூறுகிறார்:

நாங்கள் தபூக்கை அடைந்தபோது, 'எச்சரிக்கையாக இருங்கள்!; இன்று இரவு கடுமையான சூறைக்காற்று வீசும்; யாரும் எழுந்து நிற்க வேண்டாம்; ஒட்டகத்தை வைத்திருப்பவர்கள் அதன் முழங்கால்களைக் கட்டி வைக்கட்டும்; யாருக்காவது அத்தியாவசியத் தேவைக்காக வெளியே செல்ல வேண்டியிருந்தால் தனியாகச் செல்லாமல், இருவர் சேர்ந்து செல்லுங்கள்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் கூறினார்கள்.

சூறைக்காற்றைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கணித்திருக்கலாம் அல்லது அல்லாஹ் அன்னாருக்கு அறிவித்திருக்கலாம்.

நபித்தோழர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் அன்னாரின் கட்டளைப்படி எங்கள் ஒட்டகங்களைக் கட்டினோம். அந்த இரவு மிகவும் பலத்த சூறைக்காற்று வீசியது. ஒரு மனிதர் நின்றுகொண்டிருந்தார்; அந்தக் காற்று அவரை தே கோத்திரத்தின் மலைகளின் மீது வீசிவிட்டது.

(ஸஹீஹ் புஹாரி, பாபுஸ் ஸக்காத், ஹதீஸ் எண்: 1481) (ஸஹீஹ் முஸ்லிம், நூர் ஃபவுன்டேஷன், தொகுதி 2, பக்கம் 184)

மற்றோர் அறிவிப்பில், பனூ ஸாஇதா குலத்தைச் சேர்ந்த இரண்டு நபர்கள் இந்தக் கட்டளையைப் பின்பற்றவில்லை என்று உள்ளது. ஒருவர் இயற்கைத் தேவைக்காகத் தனியாக வெளியே சென்றார். மற்றவர் தன் ஒட்டகத்தைத் தேடித் தனியாகச் சென்றார். இயற்கைத் தேவைக்காகச் சென்றவருக்கு தொண்டை அழற்சி ஏற்பட்டது. அது தொண்டையில் வரும் ஒரு நோய். ஒட்டகத்தைத் தேடிச் சென்றவரை பலத்த காற்று தூக்கிக்கொண்டு தே குலத்தின் இரண்டு மலைகளுக்கு இடையில் வீசியது.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டபோது, 'யாரையும் துணையின்றி வெளியே செல்ல வேண்டாம் என்று நான் தடை செய்யவில்லையா?' என்று கேட்டார்கள்.

நோய்வாய்ப்பட்டவருக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்; அவர் குணமடைந்தார். மற்றவர், அதாவது தே மலைகளில் வீசப்பட்டவரை, பின்னர் தே குல மக்கள் மதீனாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள்.

(தாரீகுத் தபரீ, தொகுதி 2, பக்கம் 183. தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2012-ம் ஆண்டு பதிப்பு)

ஓர் அறிவிப்பில் வருகிறது; சூறைக்காற்றுக்குப் பிறகு மக்கள் காலையில் எழுந்தபோது அவர்களிடம் தண்ணீர் இருக்கவில்லை. அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்தபோது அன்னார் (ஸல்) துஆ செய்தார்கள். அல்லாஹ் ஒரு மேகத்தை அனுப்பினான்; அது அவர்கள் மீது கனமழை பொழிந்தது. அதனால் அவர்கள் தங்கள் தோல் பைகளை நிரப்பிக்கொண்டார்கள்; தங்கள் தேவைகளையும் பூர்த்தி செய்துகொண்டார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 819, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001-ம் ஆண்டு)

தபூக் பயணத்தின்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துஆவின் விளைவாக மழை பொழிந்த இன்னோர் அற்புத சம்பவத்தைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'தாங்கள் தபூக் போரைப் பற்றி எங்களுக்குச் கூறுங்கள்' என்று ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் கூறினார்கள்: 'நாங்கள் கடும் வெயில் காலத்தில் தபூக்கை நோக்கிப் புறப்பட்டோம்; நாங்கள் ஓரிடத்தில் முகாமிட்டோம். எங்களுக்கு தாகம் ஏற்பட்டது. அதனால் எங்கள் கழுத்துகள் வெட்டப்படுவது போல உணர்ந்தோம்; நிலைமை எப்படி இருந்ததென்றால், ஒருவர் தண்ணீரைத் தேடிச் சென்று அவர் திரும்பி வரவில்லை என்றால் அவர் இறந்துவிட்டார் என்று நாங்கள் நினைப்போம்; ஒருவர் தன் ஒட்டகத்தை அறுத்து அதன் வயிற்றில் இருந்து தண்ணீரை பிழிந்து குடிப்பார்; மீதமுள்ளதை தன் வயிற்றில் வைத்துக் கொள்வார்.

இங்கு பையில் வைத்துக் கொள்வதை குறிக்கிறது என்று நான் கருதுகிறேன்.

'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களின் துஆவில் அல்லாஹ் நன்மை வைத்துள்ளான்; எனவே எங்களுக்காக துஆ செய்யுங்கள்' என்று ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள். 'நான் துஆ செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா?' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். நாங்கள், 'ஆம்' என்று கூறினோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் இரு கைகளையும் உயர்த்தினார்கள். அன்னாரின் கைகள் கீழே வருவதற்கு முன்பே ஒரு மேகம் நிழலிட்டது; மழை பெய்யத் தொடங்கியது. மக்கள் தங்களிடம் இருந்த அனைத்துப் பாத்திரங்களையும் நிரப்பிக்கொண்டார்கள். பிறகு நாங்கள் அந்தப் பகுதியை ஆய்வு செய்தபோது, அந்தப் படைப்பிரிவுக்கு அப்பால் எங்கும் மழை பெய்யவில்லை என்பதை அறிந்தோம்.

(ஸஹீஹ் இப்னு ஹிப்பான், கிதாபுத் தஹாரா, ஹதீஸ் எண்: 1383,தாருல் மஃரூஃபஃ, பெய்ரூத்)

அதேபோல், தபூக்கின் நீரூற்றில் நீர் அதிகரித்த ஓர் அற்புதத்தின் குறிப்பும் கிடைக்கிறது.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் தபூக் போரில் கலந்துகொண்டோம். அன்னார் தொழுகைகளைச் சேர்த்துத் தொழுதார்கள். அன்னார் லுஹர் அஸரையும், மஃக்ரிப் இஷாவையும் சேர்த்துத் தொழுதார்கள். ஒரு நாள் அன்னார் தொழுகையைச் சற்றுத் தாமதித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்து, லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளைச் சேர்த்துத் தொழுதார்கள்; பிறகு உள்ளே வந்தார்கள். பிறகு, வெளியே சென்று மஃக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைச் சேர்த்துத்

தொழுதார்கள். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நாளை இன்ஷா அல்லாஹ் நீங்கள் தபூக்கின் நீரூற்றை அடைவீர்கள்; சூரியன் நன்கு உதிக்கும் வரை நீங்கள் அதை அடைய மாட்டீர்கள்; எனவே, உங்களில் யார் அதை அடைந்தாலும் நான் வரும் வரை அதன் தண்ணீரைத் தொட வேண்டாம்' என்று கூறினார்கள்.

அங்கு ஒரு நீரூற்று இருந்தது, நான் வரும் வரை அதிலிருந்து எதையும் எடுக்க வேண்டாம் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: பிறகு, நாங்கள் அந்த நீரூற்றை அடைந்தோம். ஆனால் இரண்டு பேர் எங்களுக்கு முன்பே அங்கு சென்றிருந்தனர். அந்த நீரூற்றில் கொஞ்சமாக தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த இருவரிடமும், 'நீங்கள் அதன் தண்ணீரைத் தொட்டீர்களா?' என்று கேட்டார்கள். இருவரும் 'ஆம்' என்றார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் நாடிய விதத்தில் அவ்விருவரையும் எச்சரிக்கை செய்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: பிறகு மக்கள் தங்கள் கைகளால் சிறிது சிறிதாக நீரூற்றிலிருந்து தண்ணீரை வெளியே எடுத்தார்கள். எந்த அளவுக்கென்றால், ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் சேர்ந்தது. பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதில் தம் இரு கைகளையும் கழுவினார்கள்; தம் முகத்தைக் கழுவினார்கள்.

பிறகு அந்தத் தண்ணீரை நீரூற்றுக்குள் மீண்டும் ஊற்றினார்கள். அப்போது நீரூற்று வேகமாகப் பாயத் தொடங்கியது. எந்த அளவுக்கென்றால், மக்கள் திருப்தியடையும் அளவுக்கு அருந்தினார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, 'முஆஸே! உமக்கு நீண்ட ஆயுள் கிடைத்தால் பின்னர், இந்த இடம் தோட்டங்களால் நிரம்பி வழிந்து விட்டதைக் காண்பீர்' என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபளாயில், ஹதீஸ்: 4215, மொழியாக்கம் நூர் ஃபவுண்டேஷன், தொகுதி 12, பக்கம் 184 - 185)

முஹம்மத் பின் அப்துல் பாக்கி ஸர்கானி அவர்கள் இந்த ஹதீஸின் விளக்கத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்: 'இது மறைவான செய்தியாக இருந்தது; இது நிறைவேற்றப்பட்டுவிட்டது' என்று எழுதியுள்ளார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களைச் சிறப்பாகக் குறிப்பிட்டதில் ஒரு மறைவான செய்தி இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் இறை விதிப்படி ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் பின்னர் அந்தப் பகுதிக்கு, அதாவது சிரியாவின் பகுதிக்கு வந்தார்கள்; அங்கேயே மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலம், ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் இந்த இடத்தைக் காண்பார்கள் என்றும், அந்தப் பள்ளத்தாக்கு மரங்கள் மற்றும் தோட்டங்களின் தொகுப்பாக மாறும் என்றும் தெரிந்திருக்கலாம்.

இப்னு வஸ்ஸாஹ் அதாவது, அபூ அப்தில்லாஹ் முஹம்மது பின் வஸ்ஸாஹ் அவர்கள் வாழ்ந்த காலம் ஹிஜ்ரி 199 முதல் 287 வரை ஆகும். இவர்கள் அல் அந்தலுஸின் புகழ்பெற்ற ஹதீஸ் அறிஞராக இருந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: 'நான் அந்த நீரூற்றைச் சுற்றியுள்ள முழு பகுதியையும் பார்த்தேன். மரங்களின் பசுமை மற்றும் செழிப்பு எந்த அளவு இருந்தது என்றால், அது இறுதி நாள் வரை தொடரும் என்று தோன்றியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பும் அவ்வாறே இருந்தது.

(ஸரஹ் ஸர்கானீ அலா முஃதா,தொகுதி 1, பக்கம் 436, தாரே அஹ்யா உத்தராஸுல் அரபி, பெய்ரூத் 1997-ம் ஆண்டு பதிப்பு)

அட்லஸ் ஸீரத் நபவி (Atlas Sirate Nabavi) என்ற புத்தகத்தில் தபூக்கின் இந்த நீரூற்றைப் பற்றிய கூடுதல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அது என்னவென்றால், தபூக் ஷரீஆ துறையின் தலைவர் ஷேக் ஸாலிஹ் அவர்கள், இந்த நீரூற்று கிட்டத்தட்ட 1375 ஆண்டுகளாக தொடர்ந்து ஊற்றெடுத்து வந்தது என்று கூறுகிறார்.

பின்னர், பள்ளமான பகுதிகளில் அவர்கள் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டியபோது, அந்த நீரூற்றின் நீர் அந்தக் கிணறுகளுக்கு மாற்றப்பட்டது. சுமார் இருபத்தைந்து ஆழ்துளைக் கிணறுகளுக்குப் பிரித்து அனுப்பப்பட்ட பிறகு இப்போது இந்த நீரூற்று வறண்டுவிட்டது. அதன் பிறகு ஷேக் ஸாலிஹ் எங்களை ஓர் ஆழ்துளைக் கிணற்றிற்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு நான்கு அங்குல பைப் பொருத்தப்பட்டு இருந்தது. அதில் எவ்வித இயந்திரமும் இல்லாமல் முழு வேகத்துடன் தண்ணீர் வெளியேறுவதைக் கண்டோம். மற்ற ஆழ்துளைக் கிணறுகளிலும் இதே நிலைதான் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிகழ்த்திய அற்புதத்தின் அருள் காரணமாகவே இன்று தபூக்கில் இந்த அளவுக்குத் தண்ணீர் உள்ளது. மதீனா மற்றும் கைபரைத் தவிர வேறு எங்கும் இவ்வளவு தண்ணீரை நாங்கள் பார்க்கவில்லை. உண்மையில், தபூக்கின் தண்ணீர் அந்த இரண்டு இடங்களை விடவும் அதிகமாக உள்ளது. இந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி இப்போது தபூக்கில் எல்லா இடங்களிலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப தபூக் பகுதி தோட்டங்களால் நிரம்பி வழிகிறது. மேலும், நாளுக்கு நாள் அது தோட்டங்களால் நிரம்பிக்கொண்டே செல்கிறது.

(டாக்டர் ஷுவ்கீ அபூ கலீல் அவர்களின் மொழியாக்க நூல், அட்லஸ் ஸீரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பக்கம் 431, தாருஸ் ஸலாம்)

தபூக் போரில் காவல் காக்கும் பொறுப்பு பற்றியும் எழுதப்பட்டுள்ளது: தபூக் போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறப்புப் பாதுகாப்புக்கு ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்களை நியமித்தார்கள். அவர்கள் தம் தோழர்களுடன் படையைச் சுற்றி வந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அதிகாலை வரை எங்கள் பின்னால் தக்பீர் சத்தம் கேட்கிறது. பாதுகாப்புக்காக எங்களில் வேறு யாரையாவது சுற்றி வருவதற்கு தாங்கள் கட்டளையிட்டீர்களா?' என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், 'நான் அவ்வாறு செய்யவில்லை. ஆனால், ஒருவேளை சில முஸ்லிம்கள் தாங்களாகவே இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கலாம் என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் சில்கான் பின் ஸலாமா அவர்கள் - அவர்களுக்குக் காவல் பணி கொடுக்கப்படவில்லை என்றாலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் காரணமாகத் தாங்களாகவே இந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தார்கள் - அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் என் பத்து முஸ்லிம் குதிரை வீரர்களுடன் புறப்பட்டு டியூட்டியில் உள்ள இவர்களின் பாதுகாப்பை மேற்கொள்கிறேன்' என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தவாறு, 'அல்லாஹ்வின் பாதையில் காவல் காப்பவர்களைப் பாதுகாப்பவர்களுக்கு அல்லாஹ் கருணை காட்டுவானாக! நீங்கள் பாதுகாத்த ஒவ்வொரு உயிருக்கும், மனிதர்களாக இருந்தாலும் சரி! விலங்குகளாக இருந்தாலும் சரி! ஒரு கீராத் வெகுமதி கிடைக்கும்' என்று கூறினார்கள். ஒரு கீராத் என்பது சுமார் இரண்டு கிராம் எடையுள்ள தங்கம் போன்றது.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷஷாத், தொகுதி 5, பக்கம் 453,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1993-ம் ஆண்டு பதிப்பு)

தபூக் பயணத்தின்போது முகாமிடும் போதெல்லாம் மக்களில் சிலர் பின்தங்கிவிடுவார்கள் என்று ஓர் அறிவிப்பில் வருகிறது.

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நபித்தோழர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இன்று இன்னார் பின்தங்கிவிட்டார்' என்று கூறுவார்கள். அதற்கு, 'அவரை விட்டுவிடுங்கள்; அவரிடம் ஏதாவது நன்மை இருந்தால் அல்லாஹ் அவரை உங்களோடு சேர்ப்பான்; அதுவல்லாமல் வேறு ஏதேனும் இருந்தால் அல்லாஹ் அவரை விட்டு உங்களுக்கு விமோசனம் அளிப்பான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இதற்கிடையில், யாரோ ஒருவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் பின்தங்கிவிட்டார்கள்; அவர்களின் ஒட்டகம் சோர்வடைந்துவிட்டது என்று கூறினார். அதற்கு அன்னார், 'அவரை விட்டுவிடுங்கள். அவரிடம் ஏதாவது நன்மை இருந்தால் அல்லாஹ் அவரை உங்களோடு சேர்ப்பான். அதுவல்லாமல் வேறு ஏதேனும் இருந்தால், அல்லாஹ் அவரை விட்டு உங்களுக்கு விமோசனம் அளிப்பான்' என்று கூறினார்கள். (ஹஸ்ரத் அபூஸர் (ரலி)) அவர்களின் சூழ்நிலை எவ்வாறு இருந்தது என்றால், அவர்களின் ஒட்டகம் மிகவும் சிரமப்படுத்தியது; அது முற்றிலும் சோர்வடைந்துவிட்டது. ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களின் ஒட்டகம் முற்றிலும் சோர்வடைந்து பலவீனமானபோது, அவர்கள் அதிலிருந்து இறங்கி தம் பொருட்களை தம் முதுகில் தூக்கிக்கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்து நடந்து சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறிது பயண தூரத்திற்குப் பிறகு ஓரிடத்தில் முகாமிட்டார்கள். அப்போது முஸ்லிம்களில் ஒருவர் தொலைவில் பார்த்து, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பாதையில் ஒரு மனிதர் தனியாக நடந்து வருகிறார்' என்று கூறினார். அதற்கு அவர்கள், 'குன் அபாஸர்' - 'அது அபூஸராக இருக்கக் கூடாதா?' என்று கூறினார்கள்.

மக்கள் உன்னிப்பாகப் பார்த்தபோது, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே!, அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் அபூஸர்தான்' என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் அபூஸர் மீது கருணை காட்டுவானாக! அவர் தனிமையாகவே நடந்தார்; தனிமையாகவே இறப்பார்; தனிமையாகவே எழுப்பப்படுவார் என்று கூறினார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 819 - 820, தபூக் போர், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூஸர் அவர்கள் தனிமையாக இருப்பதைப் பற்றி கூறியிருந்தது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் சொல்லுக்குச் சொல் (அப்படியே) நிறைவேறியது. அப்போது அவர்கள் தம் குடும்பத்துடன் மதீனாவிற்கு வெளியே ரப்ஸா எனும் இடத்தில் வசித்து வந்தார்கள்.

ரப்ஸா என்பது மதீனாவிலிருந்து மூன்று நாட்கள் பயணத் தூரத்தில் சுமார் 96 மைல் தொலைவில் உள்ள ஓர் இடம் ஆகும். அந்த நேரத்தில் அங்கு வேறு எந்தக் குடியிருப்பும் இல்லை. அவருடன் அவரது மனைவியும், குழந்தைகளும் ஓர் அடிமையும் இருந்தார்கள். அவர்கள் இறக்கும் நேரம் நெருங்கியபோது, அவர்களின் மனைவி தனிமையின் காரணமாக கவலைப்பட்டார். கஃபன் துணி கூட இல்லை. அதனால் அவர் அழ ஆரம்பித்தார். அப்போது, அவரிடம் 'அழாதே' என்று ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ; பின்னர் கூறினார்கள்: உங்களில் ஒருவர் வனாந்தரத்தில் இறப்பார்; அவரது ஜனாஸா தொழுகையில் ஈமான் கொண்ட ஒரு கூட்டம் கலந்துகொள்ளும்' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன். மேலும், அன்னார் (ரலி) இத்துடன் தன் மனைவியிடம் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக் கூறியபோது, அங்கு யாரெல்லாம் இருந்தார்களோ அவர்கள் அனைவரும் அப்போது இறந்துவிட்டிருந்தார்கள். (அவர்களில்) எவரும் காட்டில் தனியாக இறக்கவில்லை; (அவர்களில் எஞ்சியவன்) நான் மட்டுமே ஆவேன்;

நீ கவலைப்பட வேண்டாம்; நான் இறந்தவுடன் எனக்கு குளிப்பாட்டி, என் உடலை மதீனா செல்லும் பாதையில் வைத்துவிடு!

ஆகவே, அவரும் அவ்வாறே செய்தார். சிறிது நேரத்திலேயே, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் தமது தோழர்களுடன் அந்த இடத்தை கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் ஈராக்கிலிருந்து உம்ரா செய்வதற்காகச் சென்று கொண்டிருந்தார்கள். அது ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களின் ஜனாஸா என்று அவர்களுக்குத் தெரிந்தபோது, அவர்களின் கண்களில் கண்ணீர் வந்தது. அவர்கள் அழுதுகொண்டே, அபூஸர் தனிமையாகவே நடந்தார்; தனிமையாகவே இறப்பார்' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியது உண்மைதான் என்றார்கள்.

பிறகு அவர்கள் தம் தோழர்களுடன் அவருக்கு ஜனாஸா தொழுகை தொழுது, அங்கேயே அடக்கம் செய்தார்கள். பிறகு அவர்கள் தம் சகாக்களிடம் தபூக் போர் சம்பந்தமாக ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களைப் பற்றிய முழு சம்பவத்தையும் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வார்த்தைகள் எவ்வாறு நிறைவேறியது என்பதையும் கூறினார்கள்.

(முஸன்னத் அஹ்மத் பின் ஹன்பல், தொகுதி 7, பக்கம் 170, அறிவிப்பு எண்: 21700, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் வாஸிலஃ பின் அஸ்கஃ (ரலி) அவர்கள் படையுடன் சேர்ந்த மற்றொரு சம்பவமும் உள்ளது. இவர் தபூக் போருக்குச் சில நாட்களுக்கு முன் மதீனாவிற்கு வந்து இஸ்லாத்தைத் தழுவினார். இவர் மதீனாவில் இருக்கும்போதே ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் தபூக்கிற்கான ஆயத்தத்தை அறிவித்தார்கள்.

(அஸதுல் காபா, தொகுதி 5, பக்கம் 399, தாருல் குதுபில் இல்மியா, 2003-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் வாஸிலஃ பின் அஸ்கஃ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தபூக் போர் தொடர்பாக அறிவிப்பு செய்யக் கூடிய ஒருவரைக் கொண்டு அறிவிக்கச் செய்தார்கள். நான் என் வீட்டிற்குச் சென்று திரும்பியபோது, அன்னாரின் தோழர்கள் ஏற்கனவே புறப்பட்டுவிட்டார்கள். 'யாராவது ஒருவருக்குத் தன்னுடன் ஒருவரைச் சவாரி செய்து அழைத்துச் செல்ல முடியுமா? கிடைக்கும் போர்ச் செல்வத்தை அவர் அதற்குப் பதிலாக பெற்றுக் கொள்ளட்டும்' என்று நான் நகரில் உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தேன். ஒரு வயதான அன்ஸாரி, 'சரி, நாம் அவருடைய பங்கை பெற்றுக் கொள்வோம்; அவரை எம்முடன் சவாரி செய்ய வைப்போம்; எம்முடன் உண்ணவும் கொடுப்போம்' என்று கூறினார். அதற்கு, நான் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்கிறேன்; அந்த மனிதன் நான்தான்' என்று நான் கூறினேன். அதற்கு அந்த முதியவர், 'சரி! அல்லாஹ்வின் பரக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து செல்லுங்கள்! என்று கூறினார்.

ஹஸ்ரத் வாஸிலா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆகவே, நான் ஒரு சிறந்த கூட்டாளியுடன் புறப்பட்டேன். எந்த அளவுக்கென்றால், அல்லாஹ் எங்களுக்குப் போர்ச்செல்வத்தை வழங்கினான். என் பங்கில் வேகமாக ஓடக்கூடிய சில ஒட்டகங்கள் கிடைத்தன. நான் அவற்றை என் கூட்டாளியிடம் ஓட்டிச் சென்றேன். அவர் வெளியே வந்து தன் ஒட்டகத்தின் பின்புறத்தில் அமர்ந்தார். 'இவற்றை என்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thalkkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

பக்கம் பின்னோக்கி ஓட்டுங்கள்' என்று கூறினார்.

பிறகு, 'இவற்றை என் பக்கம் முன்னோக்கி ஓட்டுங்கள்' என்று கூறினார். அதன் பிறகு அவர் என்னிடம், 'உன் ஒட்டகங்கள் மிகவும் சிறந்தவை' என்று கூறினார். 'இது, நான் நிபந்தனை விதித்த உங்கள் செல்வம் ஆகும்' என்று கூறினேன். அதற்கு அவர், 'என் சகோதரரின் மகனே! இது உனக்கு உரியது; நீயே வைத்துக்கொள். இந்தப் பங்கை எடுத்துக்கொள்வது என் நோக்கம் அல்ல' என்று கூறினார்.(ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் ஜிஹாது, ஹதீஸ் எண்: 2676)

எவ்வாறிருப்பினும், இந்தப் போரில் அவர் இவ்வாறாக கலந்துகொண்டார்.

அதேபோல், ஹஸ்ரத் அபூ கைஸ்மஃ (ரலி) அவர்கள் படையுடன் சேர்ந்த ஒரு சம்பவமும் காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தப் படையிலிருந்து பின்தங்கிய நபித்தோழர்களில் ஹஸ்ரத் அபூ கைஸ்மஃ (ரலி) அவர்களும் இருந்தார்கள். அந்நாட்களில் அவர்கள் மதீனாவில் இருக்கவில்லை என்று தெரிகிறது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தபூக் பயணத்திற்காகப் புறப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு, ஒரு கடுமையான வெப்பமான நாளில் இவர்கள் மதீனாவில் உள்ள தன் வீட்டிற்கு வந்தார்கள். தம் இரண்டு மனைவிகளும் தோட்டத்தில் தத்தமது குடிசைகளின் மீது தண்ணீர் தெளித்து வைத்திருப்பதைக் கண்டார்கள். அவர்களுக்காகவும், அவருக்காகவும் தண்ணீர் குளிர்ச்சியாக்கப்பட்டிருந்தது. அவர்களுக்காக உணவு ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் அபூ கைஸ்மஃ (ரலி) அவர்கள் குடிசையின் வாசலில் நின்று, தம் மனைவிகள் தமக்காகச் செய்திருந்த ஏற்பாடுகளைப் பார்த்தபோது, 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடும் கொதிக்கும் வெயிலிலும் கடுமையான வெப்பக் காற்றிலும் பயணத்தில் இருக்க, அபூ கைஸ்மாவோ குளிர்ச்சியான நிழலிலும், நல்ல உணவுகளிலும், அழகான மனைவிகளுடன் தன் கால்நடைகளுடன் வசிக்கலாமா? இது ஒருபோதும் நியாயம் இல்லை' என்று கூறினார்.

பிறகு அவர், 'அல்லாஹ்வின் மீதாணையாக நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சேரும் வரை உங்கள் இருவரிடமும் வரமாட்டேன். எனவே, நீங்கள் இருவரும் என் பயண ஆயத்தங்களை செய்யுங்கள்' என்று கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். பிறகு, அபூ கைஸ்மா ஒட்டகத்தின் மீது சவாரி செய்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார். ஒரு நண்பகலில், கடுமையான வெப்பம் மற்றும் அனல் காற்று வீசியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொலைதூரப் பாலைவனத்தில் ஒரு சவாரி வருவதைக் கண்டார்கள். இப்னு ஹிஷாமின் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக்கை சென்றடைந்து விட்டிருந்தார்கள்.மேலும் كُنْ اَبَا خَيْثَمَةَ – 'அது அபூ கைஸ்மஃவாக இருக்கக் கூடாதா?' என்று கூறினார்கள்.

அவர் நெருங்கி வந்தபோது, நபித்தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே ! அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் அபூ கைஸ்மஃ அன்ஸாரிதான்' என்று கூறினார்கள். அவர் தன் ஒட்டகத்தை உட்கார வைத்துவிட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து ஸலாம் கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், 'அபூ கைஸ்மஃவே! ஏன் பின்தங்கினாய்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், நடந்த முழு விஷயத்தையும் கூறினார். அதற்கு அன்னார் (ஸல்) அவருக்கு நன்மை கிடைக்க வேண்டி துஆ செய்தார்கள்.

(அஸதுல் காபா, தொகுதி 6, பக்கம் 89, அபூ கைஸ்மஃ அன்ஸாரி, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1971-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் எழுதுகிறார்கள்:

வரலாற்றில் வருவதென்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக்கிற்குப் புறப்பட்டபோது சில நபித்தோழர்கள் பின்தங்கி விட்டார்கள். அவர்களில் அபூ கைஸ்மஃவும் ஒருவர் ஆவார்கள். இவர் மிகவும் நல்லவர். பின்தங்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இருக்கவில்லை. ஆனால், போருக்குப் புறப்பட உத்தரவு வந்தபோது, அவர் வீட்டில் இருக்கவில்லை. அவர் வீட்டிற்கு வந்தபோது, ஒருவர் பேசுவதற்காக ஆவல் கொண்டு காத்திருப்பதைப் போன்று அவருடைய மனைவி அவருக்காகக் காத்திருப்பதைக் கண்டார். அவர் தன் மனைவியின் இந்த ஆசையை புறக்கணித்துவிட்டு, தன் மனைவியிடம், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புறப்பட்டுவிட்டார்களா?' என்று கேட்டார். அவருடைய மனைவியோ, 'சற்று உட்காருங்கள்' என்று கூறினார். அதற்கு அவர், 'அல்லாஹ்வின் தூதர் போருக்காகப் புறப்பட்டுவிட்டார்; நான் வீட்டில் ஓய்வெடுப்பதா? அபூ கைஸ்மஃவால் அப்படி இருக்க முடியாது' என்று பதிலளித்துவிட்டு, உடனே புறப்பட்டு குதிரையை ஆயத்தம் செய்து அதன் மீது சவாரி செய்து ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் சென்ற பாதையில் சென்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் அவர்கள் இங்கு குதிரையைக் குறிப்பிட்டுள்ளார்கள். முந்தைய அறிவிப்புகளில் ஒட்டகம் என்று உள்ளது அல்லது குதிரை என்று தவறாகக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். எவ்வாறிருப்பினும், இரண்டு விதமான அறிவிப்புகளும் இருக்கலாம். எவ்வாறிருப்பினும், அந்த சவாரியில் அமர்ந்து புறப்பட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டுச்சென்ற அந்த பாதையில் சென்றார். முடிவில், கடினமான பயணத்திற்குப் பிறகு, பல இடங்களை கடந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படையுடன் சேர்ந்துகொண்டார்.

அவர் படையை நெருங்கியபோது, சில நபித்தோழர்கள் தொலைவிலிருந்து புழுதி எழுவதைப் பார்த்து, யார் வருகிறார்? என்று யோசிக்க ஆரம்பித்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'குன் அபா கைஸ்மா' என்று கூறினார்கள்.

அதாவது, அபூ கைஸ்மாவாக ஆகிவிட வேண்டும் என்றார்கள். வரக்கூடியவர் யாராக இருந்தாலும் அவர் அபூ கைஸ்மஃவாக ஆகி விட வேண்டும் என்று இந்த வாக்கியத்திற்கு பொருள் கிடையாது. அதன் பொருள் இதுவே ஆகும். அதாவது வருபவர் அபூ கைஸ்மாவாக இருக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 168 - 169, காதியான் பதிப்பு 2004-ம் ஆண்டு)

كُنْ என்ற சொல்லை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் வேறோர் இடத்தில் எழுதியுள்ளார்கள். முதலில் கூறப்பட்ட மேற்கோள் தஃப்ஸீரே கபீரில் ஓர் ஆயத்தின் விளக்கமாக இருந்தது. இந்த மேற்கோளுக்கும் அதே சான்றுதான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் كُنْ என்ற சொல்லை விவரித்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

நினைவில் கொள்ளுங்கள்! كُنْ என்ற சொல் அரபு மொழியில் ஒருவருக்கு கட்டளையிடவும் கூறப்படுகிறது; விருப்பத்தை வெளிப்படுத்தவும் கூறப்படுகிறது.

ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் சிரியாவை நோக்கிப் படை எடுத்தபோது - அபூ கைஸ்மஃ என்ற ஒரு நபித்தோழர் இருந்தார் - அவர் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவரை அன்னார் மிகவும் நேசித்தார்கள். கடமையை நிறைவேற்றுவதில் இந்த மனிதர் கவனக்குறைவாக இருக்க மாட்டார் என்று அன்னார் கருதி வந்தார்கள். ஆனால், அன்னார் படையுடன் நகரத்திலிருந்து புறப்பட்டு சிறிது தூரம் சென்ற பிறகு, தம் தோழர்களை ஆய்வு செய்தபோது, அபூ கைஸ்மஃவைக் காணவில்லை. இதனால் அன்னார் (ஸல்) மிகவும் வருத்தப்பட்டார்கள், 'நான் அவர் மீது இவ்வளவு நல்லெண்ணம் வைத்திருந்தேன்; ஆனால் அவர் இந்த ஜிஹாதிலிருந்து பின்தங்கிவிட்டார்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அன்னார் (ஸல்) சென்று கொண்டிருந்தபோது, 'ஹுஸூர்! யாரோ ஒருவர் பின்னால் இருந்து வருகிறார்' என்று ஒருவர் கூறினார். அன்னார் (ஸல்) அந்தப் பக்கமாகப் பார்த்து, كُنْ اَبَا خَيْثَمَةَ என்று கூறினார்கள். அந்தப் புழுதி நீங்கி

அந்த நபர் நெருங்கி வந்தபோது, அவர் அபூ கைஸ்மஃதான் என்பதை மக்கள் கண்டனர்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது விருப்பத்தை இவ்வளவு விரைவாக நிறைவேற்றியதற்காக அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். இப்போது 'குன் அபா கைஸ்மா' என்பதற்கு, வேறு யாரோ ஒருவர் வந்தாலும், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அவர் அபூ கைஸ்மஃவாக மாறட்டும்! என்று கூறியதாக பொருள் கிடையாது.

மாறாக, كُنْ اَبَا خَيْثَمَةَ என்பதற்கு, 'வரக்கூடியவர் அபூ கைஸ்மஃவாக இருக்க அல்லாஹ் நாட வேண்டும்' என்பது பொருள் ஆகும். எனவே, அரபு மொழியில் இது ஒரு வழக்கமான சொல் ஆகும். சில சமயங்களில் விருப்பத்தை வெளிப்படுத்தவும் 'குன்' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.'

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 5, பக்கம் 250,காதியான் பதிப்பு 2004-ம் ஆண்டு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எந்த ஆயத்திற்கு விளக்கவுரை கூறும்போது இதைக் கூறினார்களோ அந்த ஆயத்தை நான் எடுத்து வைக்கவில்லைதான்! ஆனால் எவ்வாறிருப்பினும், كُنْ என்ற சொல்லின் விளக்கத்தை எடுத்து வைத்து விட்டேன்.

மீதமுள்ளவற்றை, இன்ஷா அல்லாஹ்! இனி வரும் காலத்தில் எடுத்துரைப்பேன்.

ரப்வா பள்ளிவாசலில் நடந்த சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்காக துஆ செய்யுங்கள். மிகவும் காயமடைந்தவர்களை அல்லாஹ் தன் பாதுகாப்பில் வைத்து, அவர்களுக்கு விரைவில் முழுமையான குணம் அளிப்பானாக. பாகிஸ்தானில் எதிரிகளின் ஒவ்வொரு திட்டத்தையும் அல்லாஹ் தோல்வியடையச் செய்வானாக. ரப்வாவிலும் இன்று 'கத்மே நுபுவத்' என்ற பெயரில் ஒரு கூட்டம் நடக்கிறது. மவ்லவிகள் தாங்கள் பேச வேண்டிய அசிங்கத்தையும் அசுத்தத்தையும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் அல்லது பேசி முடித்திருக்கலாம். கூட்டம் இப்போது முடிந்திருக்கலாம். அல்லாஹ் அவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக!

அதேபோல், பங்களாதேஷில் உள்ள அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் எதிரிகளின் பெரும் தீய நோக்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அங்கும் ஒவ்வோர் அஹ்மதியையும் அல்லாஹ் பாதுகாப்பானாக.

பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்குக் கருணை காட்டி, அநியாயக்காரர்களிடமிருந்து அவர்களுக்கு விடுதலை அளிப்பானாக. போர் நிறுத்தம் என்று சொல்லப்படுவது பெயரளவில்தான்! கடந்த இரண்டு நாட்களில் நடந்த சம்பவங்கள், இது பெயரளவிலான போர் நிறுத்தம் என்பதை நிரூபித்துள்ளன.

அல்லாஹ் அநீதிக்குள்ளான அந்த மக்களை அநியாயத்திலிருந்து காப்பாற்றி, அநியாயக்காரர்களைப் பிடிப்பானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், நவம்பர் 21, 2025, பக்கம் 2 - 7)

தமிழாக்கம்

முரப்பி A.P.Aதாரிக் அஹ்மது

** * * * * * *

**12- ம் பக்கத் தொடர்ச்சி....**
**(குத்பா பேருரை 24.10.25)**

என்பதாக இருந்தது.

அதாவது சிலர் செல்வந்தர்களாக இருந்தனர்; மேலும் பயணத்தில் செல்வதற்கான வழிவகைகளையும் பெற்றிருந்தனர். ஆனால் அவர்களோ பொய்யான காரணங்களைத் தேடிக் கொண்டிருந்தனர். ஒரு பக்கம் இந்த நிலை இருந்தது. மற்றொரு பக்கம் ஏழைகளின் நிலை இவ்வாறாக இருந்தது. ஆனால் அவர்களிடம் ஓர் உத்வேகம் இருந்தது; உணர்வு இருந்தது; ஈமான் இருந்தது.

மேலும் மற்றொரு பக்கம், செல்வந்தர்களாகிய அந்த (சில) மக்கள் தங்களை முஸ்லிம்கள் என்றும் கூறிவந்தனர். ஆனால் நயவஞ்சகத்தால் அவர்கள் நிறைந்திருந்தனர். இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால் எந்த மக்கள் மதீனாவில் பின்தங்கி விட்டார்களோ அவர்கள் அனைவரும் நயவஞ்சகர்களாக இருக்கவில்லை. மாறாக அவர்களில் சிலரிடம் (பயணத்தில் செல்வதற்கான) பொருள்கள் இருக்கவில்லை. எனவேதான் அவர்களுக்கு பின்தங்க நேரிட்டது. இன்னும் கூறப்போனால், அவர்களில் தூய முஸ்லிம்களும் இருந்தனர். ஆனால் அவர்களிடத்தில் ஜிஹாதில் பங்கெடுப்பதற்கான எந்த வகையான வழிவகைகளும் இல்லாத காரணத்தால்தான் அவர்களால் செல்ல முடியவில்லை.

(துஃப்ஸ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், தஃப்ஸீர் சூரா தவ்பா வசனம் 92)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நாம் சிரியாவை நோக்கிச் செல்ல இருக்கின்றோம் என்ற இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இந்த அறிவிப்பிற்கு பிறகு முஸ்லிம்கள் தூய்மையுடனும், உத்வேகத்துடனும் போட்டி போட்டுக் கொண்டு தியாகங்கள் செய்து கொண்டிருந்தனர். ஏழை முஸ்லிம்களிடம் போருக்கான தளவாடங்கள் எங்கே இருந்தன? அவர்களிடமோ எதுவும் இருந்திருக்கவில்லை. அரசாங்கத்தின் கருவூலமும் காலியாக இருந்தது. அவர்களில் சிறிதளவு செல்வம் படைத்த சகோதரர்கள்தான், அவர்களுக்கு உதவி செய்ய முடிந்திருந்தது. எனவே ஒவ்வொரு நபரும் தியாகத்தில் ஒருவர் மற்றவரை முந்திக் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த நாளன்று தமது பணத்தின் பெரும் பகுதியை இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சமர்ப்பித்து விட்டார்கள். அந்தத் தொகையானது ஓராயிரம் தங்கத்தின் தீனாராக இருந்தது......

அன்னார் (ரலி) இதனை எடுத்துரைக்கும்போது, அதன் மதிப்பு 25 ஆயிரம் ரூபாய் ஆக இருந்தது. இன்றைய நாட்களிலோ அதன் மதிப்பு பல லட்சங்கள் ஆகும். இதேபோன்று மற்ற ஸஹாபிகளும் தத்தமது தகுதிக்கேற்ப சந்தா கொடுத்தனர். மேலும் ஏழை முஸ்லிம்களுக்கு சவாரிகள், வாள்கள் அல்லது ஈட்டிகளுக்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. ஸஹாபா பெருமக்களில் தியாகத்திற்கான உத்வேகம் எந்த அளவிற்கு இருந்தது என்றால், ஏமன் நாட்டிலிருந்து சில மக்கள் இஸ்லாத்தை தழுவி மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்திருந்தார்கள்; மேலும் அவர்களில் ஏராளமானோர் ஏழ்மையின் நிலையிலேயே இருந்தார்கள். அவர்களில் சிலர் கூட இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்; நாங்கள் வேறு ஒன்றும் எதிர்பார்க்கவில்லை ; நாங்கள் அங்கு வரை சென்றடைவதற்கான ஏற்பாடு ஆகிவிட வேண்டும் என்று மட்டுமே நாங்கள் விரும்புகின்றோம் என்று கூறினர்.

ஏற்கனவே ஓதப்பட்டது போன்று திருக்குர்ஆனில் அந்த மக்களின் குறிப்பு இந்த சொற்களில் வந்துள்ளது:

وَّلَا عَلَى الَّذِيْنَ اِذَا مَآ اَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَآ اَجِدُ مَآ اَحْمِلُكُمْ عَلَيْهِ تَوَلَّوْا وَّ اَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ حَزَنًا اَلَّا يَجِدُوْا مَا يُنْفِقُوْنَ

பொருள்:

போர் அறிவிப்பு செய்யப்பட்டபோது தாங்கள் ஏறிச் செல்ல ஏதாவது ஒரு ஏற்பாட்டினை நீர் செய்ய வேண்டுமென்பதற்காக உம்மிடத்தில் வந்தவர்களிடம் குற்றம் எதுவும் இல்லை. இதற்கு நீர், உங்களை ஏற்றிச் செல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று பதிலளித்தீர். (இப்பதிலைக் கேட்டு) அவர்கள் சென்று விட்டனர். (இறைவழியில்) செலவு செய்வதற்குத் தங்களிடம் எதுவும் இல்லையே! என்ற கவலையினால் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.(9:92)

அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அந்த மக்களின் தலைவராக இருந்தார்கள். நீங்கள் அந்த நேரத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் என்ன வேண்டினீர்கள்? என்று அன்னாரிடம் கேட்கப்பட்டபோது. அன்னார் (ரலி) கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! நாங்கள் ஒட்டகத்தை கேட்கவில்லை; நாங்கள் குதிரைகளை கேட்கவில்லை; நாங்கள் வெறும் கால்களுடன் நடந்தே வருகின்றோம் என்று மட்டுமே வேண்டியிருந்தோம்.

எங்களிடமோ பாதங்களில் செருப்பு கூட இருக்கவில்லை. பூட் கூட இருக்கவில்லை; எங்களிடம் காலணிகளும் இருக்கவில்லை; இவ்வளவு நீண்ட பயணத்தை நடந்தே எங்களால் சென்றடைய முடியாது. நாங்கள் எங்களுக்கு வெறும்பணிக்காக ஜோடி செருப்புகள் கிடைத்தால் கூட நாங்கள் அந்த செருப்புகளை அணிந்துக் கொண்டு ஓடோடிச் சென்றவாறு எங்களது சகோதரர்களுடன் அந்தப் போரில் பங்கு பெறுவதற்காக சென்றடைந்து விடுவோம். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், தொகுதி 20 பக்கம் 360- 361) அவர்களின் உத்வேகம் இதுவாக இருந்தது.

இந்தப் போருக்கு செல்லும்போது மதீனாவில் பிரதிநிதியை நியமனம் செய்வது தொடர்பாக வருகின்றது. அதாவது தபூக் போர் சந்தர்ப்பத்தில் மதீனாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாரை தமது பிரதிநிதியாக ஆக்கி சென்றார்கள்? என்பது தொடர்பாக பல்வேறு கூற்றுகள் கிடைக்கின்றன.

**(தொடர்ச்சி அடுத்த இதழில்......)**

தமிழாக்கம்

முரப்பி

A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * * *

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை**

நயவஞ்சகர்கள் மக்களை தபூக் போரில் இறை தூதர் (ஸல்) அவர்களுடன் செல்வதிலிருந்து தடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்ற தகவலும் கிடைத்தது

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சில நபர்களுடன் அதன் பக்கம் அனுப்பி வைத்தார்கள். மேலும் ஸுவைலிமுடைய வீட்டிற்கு நெருப்பு வைத்து விடுங்கள்! அதாவது அதனை அழித்து விடுங்கள்; இடித்து விடுங்கள் என்று கட்டளை வழங்கினார்கள். அந்த காலத்தில் அது மண் வீடாகவே இருந்து வந்தது. மேலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அதனை செயல்படுத்தினார்கள்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரில் மிகப் பெரிய கொடியை ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள்

இது மட்டுமின்றி, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் உஸைத் பின் ஹுளைர் (ரலி) ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அல்லது வேறு சில அறிவிப்புகளின்படி ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களுக்கும் கொடி வழங்கப்பட்டது

மதிப்பிற்குரிய முரப்பி குலாம் முஹய்யிதீன் ஸுலைமான் ஸாஹிப் மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மது ஷஃபீக் ஸுஹ்கல் ஸாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய புஷ்ரா பர்வேஸ் மின்ஹாஸ் ஸாஹிபா ஆகியோரின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 அக்டோபர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ மாதம் 24 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி.....

அந்த சந்தர்ப்பத்தின் போது, சில ஸஹாபிகள் அழுதுகொண்டு இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சவாரி கொடுக்குமாறு விண்ணப்பித்தார்கள். மேலும் அவர்கள் அதற்கு தேவையுடையவர்களாக இருந்தார்கள்.

இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னிடமோ உங்களுக்கு வாகனம் கொடுத்து அனுப்பும் அளவிற்கு எதுவும் இல்லை. அப்பொழுது, அவர்கள் அழுது கொண்டு திரும்பி சென்று விட்டார்கள். இந்த ஸஹாபிகளின் தூய்மை, நன்றியுணர்வு மற்றும் இயலாமையின் அந்த தன்மையை அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளான்.

وَّلَا عَلَى الَّذِيْنَ اِذَا مَاۤ اَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَاۤ اَجِدُ مَاۤ اَحْمِلُكُمْ عَلَيْهِ تَوَلَّوْا وَّ اَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ حَزَنًا اَلَّا يَجِدُوْا مَا يُنْفِقُوْنَ

போர் அறிவிப்பு செய்யப்பட்டபோது தாங்கள் ஏறிச் செல்ல ஏதாவது ஒரு ஏற்பாட்டினை நீர் செய்ய வேண்டுமென்பதற்காக உம்மிடத்தில் வந்தவர்களிடம் குற்றம் எதுவும் இல்லை. இதற்கு நீர், உங்களை ஏற்றிச் செல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று பதிலளித்தீர். (இப்பதிலைக் கேட்டு) அவர்கள் சென்று விட்டனர். (இறைவழியில்) செலவு செய்வதற்குத் தங்களிடம் எதுவும் இல்லையே! என்ற கவலையினால் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

( அத்தவ்பா:92).

இது சூரா தவ்பாவின் வசனம் ஆகும். இந்த இழப்பின் காரணமாக அவர்கள் அதிகமாக அழுததன் காரணமாக வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்றின் நூல்களில் அவர்கள் بَكَّاؤُوْن என்ற பெயரால் நினைவு கூறப்படுகின்றார்கள். அதாவது மிக அதிகமாக அழக் கூடியவர்கள்.

அவர்களின் எண்ணிக்கைத் தொடர்பாக கருத்து வேறுபாடு உள்ளது. சில நூல்களிலோ அவர்களின் எண்ணிக்கைத் தொடர்பாக கருத்து வேறுபாடு உள்ளது. சில நூல்களிலோ சுமார் 18 பெயர்கள் கிடைக்கின்றன.

எனினும் அதிகபட்சமாக ஏழு பெயர்களில் ஒருமித்த கருத்து உள்ளது. அதில் ஸாலிம் பின் உமைர், உல்பஃ பின் ஸைத், அபூ லைலா, அப்துர் ரஹ்மான் பின் கஅப், அம்ர் பின் ஹுமாம், அப்துல்லாஹ் பின் முஃகஃப்ஃபல் முஸனீ, ஹரமீ பின் அப்தில்லாஹ் மற்றும் இர்பாஸ் பின் ஸாரியா ஆகியோர் அடங்குவர்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் யாமீனின் பின் உமைர் பின் கஅப் நழ்ரீ அவர்கள் ஹஸ்ரத் அபூ லைலா அப்துர் ரஹ்மான் பின் கஅப் மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் முஃகஃப்ஃபில் ஆகியோரை வழிப் பாதையில் சந்தித்தார்கள். இவர்கள் இருவரும் அழுது கொண்டிருந்தார்கள். நீங்கள் ஏன் அழுகின்றீர்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் இருவரிடமும் கேட்டார்கள். அதற்கு நாங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றோம். மேலும், தாங்கள் எங்களுக்கு புறப்பட்டு செல்வதற்கு வாகனத்தை தாருங்கள் என்று அன்னாரிடம் கேட்டோம். ஆனால் அங்கும் எங்களுக்கு எந்த சவாரியும் கிடைக்கவில்லை. மேலும், வாகனத்திற்கான ஏற்பாட்டை செய்கின்ற அளவிலும், மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஜிஹாதில் பங்கு பெற முடிகின்ற அளவிலும் ஏற்பாடுகளை நாங்கள் சுயமே செய்து கொள்ளும் அளவிலான செல்வம் எங்களிடத்தில் இல்லை என்று அவர்கள் கூறினர்.

அப்போது, அன்னார் (ஸல்) அவர்களுக்கு தண்ணீர் சுமக்கக் கூடிய ஓர் ஒட்டகத்தை வழங்கினார்கள். அவர்கள் இருவரும் அதன் மீது இருக்கையை வைத்தார்கள். அது மட்டுமின்றி அவர்கள் வழிப்பாதை உணவாக சில பேரீத்தம் பழங்களையும் அவர்களுக்கு கொடுத்தார்கள். மேலும் இவ்வாறு இந்த இருவரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஜிஹாதிற்காக புறப்பட்டு விட்டார்கள். இவ்வாறு அவர்களுக்கான ஏற்பாடு நடந்தது. இதேபோன்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்த போது, அவர்களும் இரண்டு ஸஹாபிகளுக்கு சவாரிகளையும், வழிப்பாதை உணவையும் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். மீதமிருந்த மூன்று பேருக்கும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வாகனத்தையும், வழிப்பாதைக்கான உணவையும் வழங்கினார்கள். இவ்வாறாக இந்த ஏழு பேரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் புறப்பட்டு விட்டார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி ஆம்னி ஹிஷ்ஷாம் பக்கம் 816, தாருல் குதுபில் இல்மியா, 2001- ம் ஆண்டு பதிப்பு)

இதேபோன்று ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி)அவர்களின் கோத்திரத்தைச் சார்ந்த மக்களும் ஹுஸுர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து சவாரி கொடுக்கும்படி விண்ணப்பித்தனர். இவர்கள் ஆறு நபர்களாக இருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களை தமது பிரதிநிதியாக ஆக்கி ஹுஸுர் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்கள், அந்த நபர்களிடமும் இதையே கூறினார்கள்: அதாவது நான் உங்களுக்கு கொடுப்பதற்கு என்னிடம் எதுவுமே இல்லை என்று கூறினார்கள்.

புஹாரியின் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: அதாவது நான் உங்களுக்கு கொடுப்பதற்கு என்னிடத்தில் எதுவுமே இல்லை என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சத்தியம் செய்து கூறினார்கள். அதனால் அந்த மக்கள் அழுதவாறு அங்கிருந்து திரும்பி சென்றார்கள். ஆனால் இதற்கிடையில் ஹஸ்ரத் நபி (ஸல்)

அவர்கள் ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்களிடமிருந்து ஒட்டகத்தை விலைக்கு வாங்கினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களை அழைத்து வரும்படி கூறினார்கள். மேலும் அன்னாரிடம், இந்த ஒட்டகத்தை எடுத்துச் செல்லுங்கள்; மேலும் நீங்களும் எடுத்துக் கொள்ளுங்கள்: உங்களது தோழர்களுக்கும் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

இந்த சம்பவத்தின் விளக்கத்தை ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் சுயமே எடுத்துரைத்துள்ளார்கள்.

ஆக, புஹாரியில் இவ்வாறு வருகின்றது: ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அஷ்அரி (ரலி) அவர்கள் மக்களுடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். அன்னாரிடத்தில் சவாரி கேட்பதற்காக சென்றார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுக்கு சவாரி கொடுக்க மாட்டேன்; மேலும் நீங்கள் சவாரி செய்து செல்வதற்கு உங்களுக்கு கொடுப்பதற்கு என்னிடத்தில் சவாரிக்கான விலங்குகள் எதுவும் இல்லை.

இந்நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் போர் செல்வங்களாக ஒட்டகங்கள் கொண்டுவரப்பட்டன. மேலும் அன்னார் (ஸல்) எங்களைப் பற்றி விசாரித்தார்கள்.

அந்த அஷ்அரி மக்கள் எங்கே இருக்கின்றனர்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) வெள்ளை நிற திமில்களைக் கொண்ட ஐந்து ஒட்டகங்களை எங்களுக்கு கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள்.

நாங்கள் அங்கிருந்து வந்து விட்ட பிறகு நாங்கள் கூறினோம்: நாம் என்ன செய்தோமோ அது நமக்கு ஒருபோதும் அருளுக்குரியதாக இருக்காது. இவ்வாறு சிந்தித்து, சிந்தித்து நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் திரும்பி சென்று விட்டோம். மேலும் நாங்கள் கூறினோம்:

எங்களுக்கு சவாரிகளை கொடுத்து விடுங்கள் என்று நாங்கள் தங்களிடம் விண்ணபித்தோம்; மேலும் நான் உங்களுக்கு சவாரிகளை கொடுக்க மாட்டேன் என்று தாங்கள் சத்தியம் செய்தீர்கள்! நான் உங்களுக்கு சவாரி கொடுக்க மாட்டேன் என்று தாங்கள் சத்தியம் செய்ததை தாங்கள் மறந்து விட்டீர்களா? என்று அவர்கள் கேட்டனர்.

நான் உங்களுக்கு சவாரி கொடுக்கவில்லை; மாறாக அல்லாஹ்தான் உங்களுக்கு சவாரி வழங்கியுள்ளான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும் கூறினார்கள்:

இறைவன் மீது ஆணையாக! நான் அப்படி ஒரு சத்தியம் செய்துவிட்டு, பின்னர் அதைவிட வேறொரு விஷயத்தை நான் சிறந்ததாக கருதுவேன் என்றால் பின்னர் இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக எது சிறந்ததாக இருக்குமோ அதையே நான் செய்வேன். மேலும் அந்த சத்தியத்திற்கு நான் பரிகாரம் வழங்கி விடுவேன்.

நான் இந்த சத்தியமும் செய்து இருந்தேன்; ஆனால் பின்னர் ஏற்பாடு ஆகிவிட்டது. அல்லாஹ்தான் ஏற்பாடு செய்தான். மேலும் நான் அவ்வாறு சத்தியம் செய்து இருக்கின்றேன் என்ற ஓர் ஐயம் இருந்திருந்தாலும் கூட, பின்னர் அதற்கெதிரில் வேறொரு சிறந்த விஷயம் எனக்கு முன்னால் வந்துவிட்டால் பின்னரோ நான் அந்த சத்தியத்தை முறித்துவிடுகின்றேன். மேலும் அதற்கான பரிகாரத்தை வழங்கி விடுகின்றேன்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. இந்த அறிவிப்பு ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களிடமிருந்து செய்யப்படுகிறது. அன்னார் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்று சவாரி கேட்க வேண்டும் என்பதற்காக எனது தோழர்கள் என்னை இறை தூதர் (ஸல்)அவர்களிடம் அனுப்பி வைத்தனர்.

ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஜைஷே உஸ்ரஃவில் அவர்களும் இடம் பெற்றிருந்தனர். மேலும் இதுவே தபூக் போராகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனது தோழர்களுக்கு சவாரி வழங்க வேண்டும் என்பதற்காக அவர்கள் என்னை தங்களிடம் அனுப்பி வைத்துள்ளார்கள் என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களுக்கு கொடுப்பதற்கு என்னிடம் எந்த சவாரியும் இல்லை.

நான் தற்செயலாக எப்படிப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இந்த கோரிக்கையை வைத்தேன் என்றால், அப்போது அன்னார் (ஸல்) சிறிது கோபமாக இருந்தார்கள். நானோ அதனை அறிந்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு மறுத்துவிட்ட பிறகு, மேலும் ஒருவேளை அன்னார் (ஸல்) என்னிடம் அதிருப்தி அடைந்து விட்டார்களோ? என்ற இந்த அச்சத்தால் மிகவும் வேதனையடைந்தவாறு நான் திரும்பி வந்து விட்டேன்.

நான் எனது தோழர்களிடத்தில் சென்றேன். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ன கூறியிருந்தார்களோ அதனை அவர்களிடம் தெரிவித்தேன். மிகவும் குறைவான நேரமே கழிந்திருந்தது. அப்போது நான் பிலால் அவர்களுடைய குரலைக் கேட்டேன். அவர்கள் அப்துல்லாஹ் பின் கைஸே! என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். நான் அன்னாருக்கு பதில் கொடுத்தேன். இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் செல்லுங்கள்; அன்னார் (ஸல்) உங்களை அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஓர் அறிவிப்பை செய்வதற்கும், ஒருவரை அழைப்பதற்கும் அங்கு இதுவே நடைமுறையாக இருந்தது. அக்காலத்தில் ஒலிப்பெருக்கி ஒன்றும் இருந்திருக்கவில்லை.

நான் அன்னாரிடம் சென்ற போது அன்னார் (ஸல்) இவ்வாறு கூறினார்கள்:

இந்த ஒட்டகங்களின் ஜோடிகளை அழைத்துச் செல்லுங்கள்; இந்த ஜோடிகள் அதாவது ஆறு ஒட்டகங்களை அழைத்துச் செல்லுங்கள். அன்னார் (ஸல்),ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்களிடம் இருந்து அப்போதே விலைக்கு வாங்கி விட்டார்கள். மேலும் கூறினார்கள்: செல்லுங்கள்; இவற்றை உங்களது தோழர்களிடம் கொண்டு செல்லுங்கள்; மேலும் அவர்களிடம் இவ்வாறு கூறுங்கள் என்றார்கள்:

அல்லாஹ் என்று கூறினார்கள்; அல்லது அல்லாஹ்வின் தூதர் உங்களுக்கு இவற்றை சவாரி செய்வதற்காக உங்களுக்கு கொடுத்திருக்கின்றார்கள்; இவற்றின் மீது சவாரி செய்து கொள்ளுங்கள்.

ஆக நான் அந்த ஒட்டகங்களை அவர்களிடத்தில் எடுத்துச் சென்றேன். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த ஒட்டகங்களை உங்களுக்கு சவாரி செய்வதற்காக வழங்கியுள்ளார்கள் என்று நான் கூறினேன். ஆனால் நான் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களை இதில் சவாரி செய்ய விட மாட்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய அந்த விஷயத்தை செவியுற்ற நபரிடம் உங்களில் ஒருவர் என்னுடன் வரும் வரை, உங்களில் எவரையும் நான் இதில் சவாரி செய்ய விடமாட்டேன்; இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்காத ஒரு விஷயத்தை நான் சுயமே உங்களிடம் கூறிவிட்டேன் என்று நீங்கள் கருதி விடாதீர்கள் என்று நான் அவர்களிடம் கூறினேன்.

நாங்களோ உம்மை எங்களில் உண்மையாளராகவே கருதுகின்றோம் என்று அவர்கள் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ முதலில் மறுத்திருந்தார்கள் அல்லவா? என்று அப்போது அன்னார் கூறினார்கள். மேலும் அன்னார் (ரலி) மிகவும் எச்சரிக்கையுணர்வுடன் கூறினார்கள்:

முதல்முறையாக நான் உங்களிடம் சுயமாக ஒன்றை கூறிவிட்டேன் என்று நீங்கள் ஒருபோதும் கருதி விடக்கூடாது; ஏனெனில் சிறிது நேரத்திலேயே நான் ஒட்டகத்தைக் கொண்டு வந்துள்ளேன். ஆனால் உண்மை இதுவே ஆகும். உங்களில் ஒருவர் அங்கு இருந்திருந்தால் அவரை அழையுங்கள். ஏனெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முதலில் இதே பதிலைதான் வழங்கியிருந்தார்கள்; ஆனால் பின்னர் ஒட்டகங்களுக்கான ஏற்பாடு ஆகிவிட்டது என்ற எனது கூற்றிற்கு அவர் எனது சாட்சியாளராக ஆகட்டும்!

எவ்வாறிருப்பினும், மக்கள் இவ்வாறு கூறினர்: நாங்கள் உம்மை எங்களில் உண்மையாளராக கருதுகின்றோம். அன்னார் (ஸல்) விரும்புவதையே நாங்கள் நிச்சயம் செய்வோம் என்று அவர்கள் கூறினர். ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி), அவர்களில் சில நபர்களை அழைத்துக் கொண்டு சென்றார்கள். எதுவரை என்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து எவர்கள் அந்த விஷயத்தை செவியுற்றிருந்தார்களோ அவர்களிடம் அந்த மக்களை அழைத்துச் சென்றார்கள். அதாவது இறைதூதர் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு சவாரி கொடுக்க மறுத்தது மற்றும் பின்னர் அவர்களுக்கு வழங்கியது போன்ற விஷயத்தை செவியுற்ற மக்களிடம் அவர்களை அழைத்துச் சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் எடுத்துரைத்த அதே விஷயத்தையே அவர்களும் எடுத்துரைத்தார்கள்.

( புஹாரி கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4415)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சத்தியம் செய்ததற்கு காரணம் என்னவாக

நபிமொழியிலிருந்து...

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 04 DEC 2025 Issue No. 49

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இருந்தது? என்பது தொடர்பாகவும், பின்னர் சத்தியத்தின் முக்கியத்துவம் என்ன? என்பது பற்றியும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் ஓர் இடத்தில் தஃப்ஸீரில் அதன் விளக்கத்தை எடுத்துரைத்துள்ளார்கள்.

அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் சவாரியே இருந்திருக்காத போது, பின்னர் இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுக்கு சவாரி கொடுக்க மாட்டேன் என்று அன்னார் (ஸல்) ஏன் சத்தியம் செய்தார்கள்? என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

உண்மையில், ஹஜ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் எந்த சவாரியும் இருந்திருக்கவில்லை என்று திருக்குர்ஆன்,ஹதீஸ்கள் மற்றும் வரலாற்றிலிருந்து தெரிய வருகின்றது. ஒரு பொருள் இருக்கின்றது; மேலும் அதனை கொடுப்பதற்கு மறுத்து விடுவது இதுதான் கஸம் அதாவது சத்தியம் செய்தல் என்பதன் பொருளாகும். நான் நிலவிற்கு செல்ல மாட்டேன் என்றோ ; அல்லது சூரியனிடத்தில் செல்ல மாட்டேன் என்றோ தற்போது எவராவது ஒருவர் சத்தியம் செய்து கூறுவாரா? அல்லது நான் ஒரே தடவையில் யானையை விழுங்கி விடுவேன் என்று எவராவது ஒருவர் சத்தியம் செய்வாரா?

இதேபோன்று இந்த கேள்வி எழுகிறது. அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சவாரியே இருந்திருக்கவில்லை. அவ்வாறிருக்க அன்னார் (ஸல்) ஏன் சத்தியம் செய்தார்கள்? இதற்கான பதில் இதுவாகும். நாகரீகமற்ற மக்கள் ஒருவர் சத்தியம் செய்து ஒன்றை கூறாத வரை அவரின் கூற்றின் மீது நம்பிக்கை கொள்வது கிடையாது. என்னிடம் சில நேரங்களில் எப்படிப்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர் என்றால், எங்களுடைய இன்ன வேலையை நீங்கள் செய்து கொடுங்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். இந்த வேலையை நாம் செய்வதில்லை; நம்மால் செய்ய முடியாது என்று நாம் கூறுகின்றோம். அப்போது அவர்கள் தங்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று நம்மிடம் கூறுகின்றனர்.

ஆக, நம்மால் அந்த வேலையை செய்ய முடியும்; ஆனால் செய்ய முடியாது என்று நாம் பொய் பேசுகின்றோம் என்று அவர்கள் கருதுகின்றனர். இதேபோன்று அந்த மக்களும் நாகரீகமற்ற மக்களாக இருந்தனர். அவர்கள் புத்தம்புதிதாக வந்திருந்தனர். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தான தர்மங்கள், மகத்துவம் ,கண்ணியம் மற்றும் உயர் நல்லொழுக்கம் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை.

என்னிடம் சவாரி இல்லை என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம் கூறிய போது, சவாரியோ இருக்கின்றது; ஆனால் அன்னார் (ஸல்) கொடுக்க மறுக்கின்றார்கள் என்று அவர்கள் கருதினர். ஏனெனில் அன்னாரோ அரசர் ஆவார்கள்; அன்னாரிடத்தில் எப்படி சவாரிகள் இல்லாமல் இருக்கும்? என்று அவர்கள் அடம்பிடித்தனர்.

மேலும் அரேபிய மக்களின் பழக்கம் இவ்வாறாக இருந்தது. அதாவது அவர்களுக்கு ஒரு விஷயத்தின் மீது சத்தியம் செய்து கூறப்படாத வரை அவர்கள் அந்த விஷயத்தில் ஆறுதல் அடைவதில்லை. சின்னச் சின்ன விஷயங்களிலும் கூட அவர்கள் ثُمَّ تَاللّٰهِ وَاللّٰهِ بِاللّٰهِ என்று கூறிக் கொண்டிருந்தனர். எனவே அவர்கள் சவாரிகள் கேட்டு அடம் பிடிக்கும்போது, அதற்கான ஒரே பதில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சத்தியம் செய்து கூறுவது ஒன்றே பதிலாக இருந்தது. ஏனெனில் அந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பதிலை சாக்கு போக்காக கருதி இருந்தார்கள். எனவே அன்னார் (ஸல்), அவர்களின் ஆறுதலுக்காக, மேலும் அவர்களிடம் இருந்து விலகுவதற்காக சத்தியம் செய்து கூறினார்கள்.

அந்த மக்கள் சென்று விட்டார்கள்; அப்போது சவாரிகளும் வந்துவிட்டன; பின்னர் அன்னார் (ஸல்) மீண்டும் அவர்களை அழைத்து அவர்களுக்கு சவாரிகளை கொடுத்து விட்டார்கள். எனவே தனது நேரம் வீணாகி விடக்கூடாது என்ற அடிப்படையிலேயே அந்த சத்தியம் அமைந்திருந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கியிருந்த பதில் என்பது ஒரு வெளிப்பாடாக இருந்தது; வாயளவில் இல்லை என்றாலும் தமது நேரம் வீணாகக் கூடாது; மேலும் அடம் பிடிக்காதீர்கள் என்பதன் வெளிப்பாடாக அது இருந்தது. மேலும் சவாரிகளை அன்னார் (ஸல்) ஏன் கொடுத்தார்கள்? என்றால், அது நன்மைக்கான சந்தர்ப்பமாக இருந்தது. மேலும் அன்னார் (ஸல்) அந்த சந்தர்ப்பம் வீணாகுவதை விரும்பியிருக்கவில்லை.

( நேக்கீ கி தஹ்ரீக் பர் ஃபவ்ரன் அமல் கரோ, அன்வாருல் உலூம் தொகுதி 18, பக்கம் 571 - 572)

சூரா தவ்பாவின் 92 வது வசனத்தை நான் முன்னரும் ஓதியிருந்தேன். அதில் அல்லாஹ்

وَّلَا عَلَى الَّذِيْنَ اِذَا مَاۤ اَتَوْكَ لِتَحْمِلَهُمْ قُلْتَ لَاۤ اَجِدُ مَاۤ اَحْمِلُكُمْ
عَلَيْهِ تَوَلَّوْا وَّ اَعْيُنُهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ حَزَنًا اَلَّا
يَجِدُوْا مَا يُنْفِقُوْنَ

என்று கூறுகின்றான். இதன் மொழியாக்கம் முன்னரும் கூறப்பட்டுள்ளது. அதன் மொழியாக்கம் இதுவாகும்:

போர் அறிவிப்பு செய்யப்பட்டபோது தாங்கள் ஏறிச் செல்ல ஏதாவது ஒரு ஏற்பாட்டினை நீர் செய்ய வேண்டுமென்பதற்காக உம்மிடத்தில் வந்தவர்களிடம் குற்றம் எதுவும் இல்லை. இதற்கு நீர், உங்களை ஏற்றிச் செல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று பதிலளித்தீர். (இப்பதிலைக் கேட்டு) அவர்கள் சென்று விட்டனர். (இறைவழியில்) செலவு செய்வதற்குத் தங்களிடம் எதுவும் இல்லையே! என்ற கவலையினால் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

( சூரா தவ்பா:92)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

இந்த வசனம் பொதுவானதாகும். ஆனால் எந்த நபர்களைப் பற்றி இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதோ அவர்கள் 7 ஏழை முஸ்லிம்களாக இருந்தனர். அவர்கள் ஜிஹாது செய்ய செல்வதற்காக பரிதவித்திருந்தனர். ஆனால் தங்களது உள்ளத்தின் வேட்கையை முழுமை செய்வதற்கான பொருட்கள் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. இந்த மக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, எங்களுக்காக சவாரிக்கான ஏற்பாட்டை செய்து தாருங்கள் என்று வேண்டினர். அப்போது, வேதனை என்னவென்றால், என்னால் எந்த ஏற்பாட்டையும் செய்ய முடியாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறு அன்னார் (ஸல்) கூறியபோது, அந்த மக்களுக்கு மிகவும் வேதனை ஏற்பட்டது. அவர்களின் கண்கள் கண்ணீரால் நிறைந்து விட்டன. மேலும் அவர்கள் திரும்பி சென்று விட்டனர். கூறுகின்றார்கள்: அவர்கள் சென்ற பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மூன்று ஒட்டகங்களைக் கொடுத்தார்கள். மேலும் 4 ஏனைய முஸ்லிம்களுக்கும் வழங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நபருக்கும் ஓர் ஒட்டகத்தை கொடுத்தார்கள். திருக்குர்ஆன் இந்த சம்பவத்தை ஏன் எடுத்துரைத்துள்ளதென்றால், அந்த ஏழை முஸ்லிம்களின் களங்கமற்றத் தன்மையுடன் அந்த செல்வந்தர்களுடன் போட்டி போட்டு காட்டட்டும்!

இதன் தொடர்ச்சி.... 9-ம் பக்கம்..

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad